‘திராவிட நாடு’ அலுவலகத்தில் ‘கொள்ளை!’

திராவிடநாடு

மலர் 9 | 17–12–50 | இதழ் 27

இலங்கை 15 சதம்] [விலை அணா 2

காகித மூட்டைகளைக் கைப்பற்றினர்

‘குழந்தை’யின் ‘குரல்வளை’ நெறிக்கப்பட்டது

அந்தி நேரத்தில் நடந்த அட்டகாசம்

சுயராஜ்ய சர்க்காரின் சூது!

அழிவைத் தேடி ஓடுகின்றனர்

நாடு தாங்காது இந்த அநீதியை

வேதனைப் பாதையில் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது, காங்கிரஸ் சர்க்கார். கண்ணியம் என்ற சொல் பறந்துகொண்டிருக்கிறது. மரியாதை, ‘இதைச்செய்யலாம் அதைச் செய்யக்கூடாது’ என்ற ஆலோசனை கூட, இந்த அகிம்சா மூர்த்திகளுக்கு இல்லை. தங்களது தர்பாரை நடத்துவதிலும், தாங்கள் எவ்வளவு அதிகார சக்தி பெற்றவர்கள் என்பதை நிரூபிப்பதிலும் இருக்குமளவு அக்கரை, ‘நியாயம்—அநியாயம்’ ஆகியவைகளைக் கவனிக்குமளவுக்கு இல்லை.

பரிதாபம் நிரம்பிய போக்கு! அனுமதிக்க முடியாத போக்கு! ஆணவத் திமிர் நிரம்பிய போக்கு!! பிரிட்டிஷ்காரன், இங்கு நடத்திப்பார்த்து தோல்வி கண்ட ‘பாதை’யில், இந்த ‘தூக்க பிம்பங்கள்’ உருண்டு கொண்டிருக்கின்றன.

கடந்த 8-12-50 அன்று சென்னை தங்கசாலைத் தெருவிலுள்ள நமது “திராவிட நாடு” நிலயத்துக்குள் புகுந்து, அங்கு தினசரி பத்திரிகைக்காக வாங்கிவைத்திருந்த ‘காகித பேல்’களை, ஜப்தி செய்து, கொண்டு போயிருக்கின்றனர்.

“ஆரிய மாயை” வழக்கில் தமக்கு தீர்ப்பளிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ 700ஐ தி. மு. க. பொதுச் செயலாளர் கட்ட மறுத்ததையும், அதற்காக அளிக்கப்பட்ட ஆறுமாத சிறை வாசத்தை ஏற்று சிறைக்குச் சென்றதையும் நாடு அறியும். பின் பத்து நாட்கள், சிறைக்குள்ளே பூட்டி வைத்து, அவர்களை தாங்களாகவே இந்த “சண்டப் பிரசண்டர்”கள் விடுவித்ததையும் நாடு அறியும்! பொதுச் செயலாளரும், தி. க. தலைவர் பெரியாரும் சிறைக்குள் கிடந்தபோது நாட்டில் நிகழ்ந்த நடவடிக்கைகளை இந்த ‘கண்மூடியினரும்’ அறிவார்கள்!

இருந்தும், தங்களுக்கு ஏற்பட்ட அவமானத்தை மறைக்க, தங்களாலான வகையில் தூற்றித் திரியும் இந்த ‘துச்சாதனர்’கள், தங்களது ‘வீம்பை’ வெளிக்காட்டி, தோல்வியை மறைக்கத் துடுக்குத்தனத்தில் குதித்திருக்கின்றனர்!

நான்கு பேல்கள்! ரூ 1200-க்கு மேற்பட்ட விலை மதிப்பு கொண்ட காகித மூட்டைகள்!! பல சங்கடங்களுக்கிடையே வெளியே கிளம்ப முடியாமல் தவிக்கும் தினசரி இதழ் “திராவிட நாடு”க்குச் சொந்தமான காகிதங்கள் இந்த ‘கண்ணியர்களால்’ எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. குழந்தை பிறக்கு முன்னரே குரல் வளையை நெறிக்கும் கொடுமைப் போக்கு! சண்டாளரும் அஞ்சும் தகாச் செயல்!! ஆனாலும் எடுத்துச் சென்றுவிட்டனர்.

8—12—50 அன்று 6 மணிக்கு காங்கிரஸ் சர்க்காரின் ‘அம்புகள்’ நால்வர், அலுவலகத்துக்கு வந்து, காகிதப்பேல்களை ஏற்றிக்கொண்டு, ஒரு வண்டியில் வைத்து எடுத்துப் போயிருக்கிறார்கள். இந்தக் கொடுமையைக் கேட்டு வட்டார பக்கமெல்லாம் நிலய வாயிலில் திரண்டிருந்தனராம்! ‘ஜப்தி’ நடைபெறும்பொழுது அலுவலகத்தில், தோழர் கே. கோவிந்தசாமி, டாக்டர் கணேசன், ஆகிய இருவர் மட்டுமே இருந்தனர். வந்த போலீஸ் அதிகாரிகள் சுமார் 15 நிமிடங்களுக்கெல்லாம் தங்கள் வேலையை முடித்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

புத்தகம் எழுதிய குற்றத்துக்காக தண்டனை தந்து, தண்டனையை ஏற்ற பின்னர் அத்தண்டனையை ‘வஜா’ செய்து, மீண்டும் தர்பார் நடத்தி இருக்கின்றனர். எங்கும் காணமுடியாத, அடக்குமுறை! பிரிட்டிஷ்காரனை விட வெகுவேகமாக நடக்கின்றனர் அடக்குமுறைப் பாதையில்!

இருட்டுகின்ற நேரத்தில்—நமது அலுவலகத்தில் நுழைந்தனராம். “திராவிட நாட்டின்” சொத்தை எடுத்துத் திரும்பியபோது, இருண்டுவிட்டதாம்—இரவு வந்துவிட்டதாம்!

இருட்டிலேதான் ‘இவர்கள்’ சுயராஜ்யம் துவங்கியது! இருண்ட பாதையிலேதான், அன்றுமுதல் சென்றுகொண்டிருக்கின்றனர்! இருட்டைத்தேடியே அலைந்துகொண்டுமிருக்கின்றனர்! இருட்டு-வெகுவிரைவில் “இவர்களைக்கப்பிக்கொள்ளும் நேரம் வந்துவிட்டது. இவர்கள், அரசியல் வாழ்வு, இருண்டுகொண்டிருக்கிறது! ‘இருட்டுக்குகை’ இவர்களை கவிழ்ந்து கொள்ளும் காலம் வந்துவிட்டது! இனி, இவர்கள் தப்பமுடியாது! இவர்கள் ‘கொள்ளை’ நீடிக்கவும் முடியாது!!

—X—

திராவிடம் பிரியும்! எதிர்ப்புகள் முறியும்!!

மத்திய தொடர்பிலிருந்து சென்னை பிரிந்து கொள்ளத்தான் வேண்டும் மத்தியசர்க்கார் நமது தேவைகளுக்கு தக்க பதில் தராவிட்டால்!

முடிவாகச் சொல்லிவிட்டார், சட்டசபையில்! கேட்டோம், கிடைக்கவில்லை. கேட்டோம்-எப்படி? அதிகாரத்தோடா, ஆணவத்தோடா? இல்லை, இல்லை! அழுதுகொண்டு, அவர்தம் அடிவருடி தொழுதுகொண்டு! அப்பொழுதும் அவர்கள் செவி சாய்க்கவில்லை

சாதாரண பிரச்சினையிலே, இந்த ‘அலட்சியம்’ இருக்குமானால் தாங்கிக் கொள்ளலாம்—சாவுப் பிரச்சினை இது! நெசவாளிக் குடும்பங்கள் இங்கு நடைப்பிணங்களாக, நாடோடி மக்களாக, கண்டகண்ட வீதிகளிலே திரிகிறார்கள் ‘ஏற்பது இகழ்ச்சி’ என்ற இனச் சித்தாந்தத்தையும் மறந்து, பிச்சையெடுக்கிறார்கள்.

இதனைக் கண்டார், அவர், சட்டசபை உறுப்பினரானாலும், அவரும் மனிதர்தானே! ஆகவே உண்மையைச் சொல்லிவிட்டார். சென்னை, டெல்லியிலிருந்து பிரிந்திட வேண்டியதுதான் என்று!

சட்டசபையில் இந்த ‘சட்டவிரோத’க் கருத்தை வெளியிட்டவர், நம்மவரல்ல — அவரும் காங்கிரஸ்காரர் — இன்னமும் ஏக இந்தியாவிலே நம்பிக்கைகொண்டவர். அவர்தான் சேலம் ஹொசூர் பகுதிக்கென உறுப்பினராகச் சென்றுள்ள நாகராச மணியகாரர் அவர்தான், சென்னை, விலகட்டும் மத்திய தொடர்பிலிருந்து என்று கூறினர். மந்திரி வகையறாவினர்—விடைபேறும் கூறவில்லை

நாம் கூறி வருகிறோம், திராவிடம் தனித்து வாழ்ந்தாலன்றி திராவிடருக்கு வாழ்விலையென்று! இதனை இன்னும் சிலகாலம் சென்றால், இன்று நம்மை எதிர்ப்பவர்களே நாளை, நம் திராவிட நாட்டு விடுதலைப் போராட்ட அணிவகுப்பின் முன்னணி வீரர்களாவார்கள் என்ற அழுத்தமான நம்பிக்கையுண்டு. அதனால்தான் பொறுத்திருக்கிறோம்.

இன்றைக்குத் தூற்றித் திரிபவர்கள், நாளைக்கு நம்மைப் போற்றுகிறார்களோ இல்லையோ, நம் திட்டத்தை ஏற்றிடப் போகிறார்கள் என்பது உறுதி. ஏனெனில் நாம் பெற்ற அனுபவம் நமக்குச் சொல்கிற ஆருடம் அப்படித்தான் சொல்கிறது! நாம் கணிக்கிற ‘அரசியல் ஆருடம்’ எப்போதும் பொய்த்துப் போனதில்லை.

நாம் எதை எப்பொழுது சொன்னாலும் முதலில் எதிர்ப்பார்கள்—பிறகு அவர்களே முன்னிருந்து நடத்துவார்கள். நமது வாழ்நாட்களிலே இம்மாதிரி சம்பவங்கள் ஆயிரக் கணக்கில் பார்த்துவிட்டோம். அதுபோலத்தான், திராவிட

(5-ம் பக்கம் பார்க்க)

நீதி சிரித்திடும் காட்சி

ஆளவந்தார் விழித்திடும் கோரம்

நமது சர்க்காருக்கும், நீதிக்கும் நெடுநாள் பகைதான் போலும்! இல்லாவிட்டால், ஆளவந்தார் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம், நீதிமன்றத்திலே பொடிப் பொடியாகின்றனவே—ஏன்? ‘வீம்புக்கு’ பல விபரீதங்களில் கால்வைத்து விடுகின்றனர். பிறகு நடக்கவும் மாட்டாமல், எடுக்கவும் மாட்டாமல் ‘பேந்த பேந்த’ விழிக்கின்றனர்.

நம்மீது, பாய்ந்து பாய்ந்து பிறகு ஓய்ந்து போன சந்தர்ப்பங்கள் உண்டு. பொதுச் செயலாளர் அண்ணாதுரை தீட்டிய ‘இலட்சிய வரலாறு’ என்ற நூலின் மீது வகுப்புத் துவேஷக்குற்றம் சாட்டினர். வழக்கு நடந்தது. பிறகு, நீதி மன்றம், இதில் குற்றம் ஏதுமில்லை என்று தீர்ப்பளித்துவிட்டது. முகத்தில் கரியை பூசிக்கொண்டது; இந்த ஆட்சியாளக் கும்பல்! நம் ‘திராவிட நாடு’ வார இதழ் மீதும் தங்கள் அடக்குமுறை ஈட்டியை வீசி, தங்களது அதிகாரத் ‘திமிரை’க் காட்டினர். ரூ. 3000 ஜாமீன் தொகை கேட்டனர். கட்டினோம். வழக்கு தொடர்ந்தோம். அதிலேயும் இந்த ஆளவந்தார்கள் மூக்குடைந்தனர். தொற்றனர். பணத்தைத் திருப்பித் தரும்படி தீர்ப்பளித்தனர் — இது போலத்தான், ‘கருப்புச் சட்டை ஒழியவேண்டுமா?’ என்ற நூல் மீது நடந்த வழக்கிலும், சர்க்கார் படு தோல்வி கண்டது. ஆகவேதான், நீதியை மதிக்காத இவர்களிடம் ஆட்சி சிக்கிவிட்டது என்று நீதியில் நம்பிக்கையுள்ளவர்கள் நினைக்கின்றனர்—வருந்துகின்றனர்

‘தேசாபிமானி’ என்றொரு தினசரி, மலையாள மொழிப்பிரதேசத்தில் வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பத்திரிகைக்கு ரூ. 10000 கேட்டுவிட்டது, இந்த ‘சுதந்திர’ சர்க்கார். அதனை நடத்தும் தோழர்கள், வழக்கு தொடுத்துவிட்டனர், சர்க்கார்மீது. வழக்கு நடந்து வந்தது.

கடைசியாக, உயர்நீதி மன்றம்; சர்க்கார் உத்திரவை ரத்து செய்துவிட்டது! வெட்கம்! நீதிக்கு, இனியாவது தலை வணங்கட்டும், இந்த நிலைமை தெரியாது, ‘கதகளி’ ஆடும் ஆளவந்தார் என்பதுதான் நமது ஆசை.

✻

அவருக்குத் தெரியாதாம்--ஆனாலும் மந்திரி

புரியாத பொருளா நம் இயக்கம்?

மாதவனார் 'மந்த' சிந்தனையாளரா?

இனியாவது தெரிந்து கொள்ளட்டும்

அவருக்குத்தெரியாதாம், நம்மை–ஆனாலும் அழித்துவிடுவோம் அரை நொடியில், கொசுவைப்போல நசுக்கி விடுவோம் என்றுமட்டும் கூவிடுகிறார். பெயர்களைமட்டும் பத்திரிகைகளில் படித்திருக்கிறாராம், வேறு ஒன்றும் அறியாராம் அந்தப் 'பெரிய மனிதர்'!

திராவிட இயக்கத்தின் நடவடிக்கைகளில் கண்காணிப்பு வெகு மும்மரமாக இருக்கிறதாம் — அப்பப்பொழுதுசர்க்கார் நடவடிக்கை எடுக்கப்படுகிறதாம்—இதை மட்டும் கூறுகிறார் அவர்—ஆனாலும் நம்மைப்பற்றித் தெரியாதாம்—பெயர் அறிவாராம்-பிறவற்றை அறியாராம்!

ஆம், அவர் 'கனம்' — அவருக்கு எப்படித் தெரியும். சாதாரண நிலையிலேயே தெரியாது என்று பேசிவந்தவர்களுக்கு, அதிகார 'மது'வருந்தி எதேச்சாதிகார 'போதை'பேறி, அது அடக்குமுறை 'வெறி'யாக மாறி விட்ட பிறகு எப்படித்தெரியும் — விஷயம் புரியும்!

சென்னை சட்டசபையில் தோழர் அன்வார், கேட்ட கேள்விக்குவிடை சொல்லப்புகுந்த கனம் மாதவமேனனர், இப்படிப் பேசியுள்ளார்,

ஆளவந்தார்களிலே அவர்ஒருவர் அதுவும் ஜனநாயக ஆட்சியிலே அவர் ஒரு மந்திரி. ஆளும் கட்சி காங்கிரஸ், இன்று இந்நாட்டில் அதன் எதிர்க்கட்சியாக உள்ளது திராவிட இயக்கம். அதனைப்பற்றி உறுப்பினர் கேட்ட கேள்விக்கு மந்திரியார் பதில் இது—தெரியாது! துணிந்து சொல்கிறார். ஆனால், அவர் பேசுகிற பொதுக்கூட்டங்களில் நம்மைப்பற்றி குறைகூற மறப்பதில்லை.

அதுகூட விசித்திரமில்லை. ஈ.வே.ரா. வையோ, அண்ணாத்துரையோ கேட்டுத்தெரிந்துகொள்ளட்டும் என்றார் 'கனம்'—அன்வாருக்கு, அது தெரியாததால் இவற்றைக் கேட்கவில்லை. இவருக்குத் 'தெரிகிறதா' என்று பார்க்கக்கூட கேட்டிருக்கலாம்.

மந்திரியைப் பார்த்து, 'நாடக ராசாக்கள்' கேட்கும் முதல் கேள்வி மாதம் மும்மாரி பெய்ததா என்பது தான். இதனைக் கேட்கிறபொழுது நம்மையறியாமலே சிரித்துவிடுவோம் ஏனெனில் நாட்டிலே மழை பெய்கிறதா, இல்லையா என்பதைக்கூட அறியாத இவனும் மன்னனுமேஎன்ற எண்ணம் பிறப்பதால்!

நாட்டில் முப்பதாண்டு காலமாக வளர்ந்துவரும் ஒருபெரும் இயக்கம் திராவிட இயக்கம் — இந்நாட்டை ஆண்ட இயக்கம்—அதன் இன்றைய வளர்ச்சியில் இரண்டு பகுதிகளாக இருந்து பணியாற்றுகின்றன. அந்த இயக்கத்தைப்பற்றிக் கேட்டார் உறுப்பினர்—அது அரசியல் இயக்கமா, இல்லை, சமுதாய முன்னேற்ற அணிவகுப்பா, மதசீர்த்த கூட்டமா இனவெழுச்சிக் கழகமா......என்று விளக்கும்படி கேட்டால், தெரியாது எனக்கு என்கிறார். அவர்களைக்கேட்டுத்தெரிந்து கொள்ளுங்கள் என்கிறார்.

இதிலே தொனிக்கிற அதிகார 'மமதை' ஒரு புறமிருக்கட்டும். ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். அவர் ஆளும் மந்திரி, நாட்டின் முழுவிபரமும் தெரியவேண்டும். ஆனால், அவருக்கு ஒருபெரும் இயக்கத்தைப்பற்றியே தெரியவில்லை என்கிறார். மாதந்தோறும் மழை பெய்ததா என்று கேட்கும் மதோன்மத்த மன்னனுக்கு, இவர்களுக்கு என்ன வித்தியாசம்?

தெரியாது—என்கிறார் அதுவரை உண்மைதான்! தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் அவர்கள். இனியாவது தெரிந்துகொள்ள முயற்சிப் பார்களா? நம்மைப் புரியாதவர்கள், நம்திட்டங்களை விளங்கிக்கொள்ளாதவர்கள் அவர்கள், என்பது, 'அங்கு' இருப்பதாலேயேதெரிகிறது. ஆனால் அவர்கள் அறிந்தாக வேண்டும்—ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார்கள். இல்லாவிட்டால், நாம்இவ்வளவு அக்கரையோடு வற்புறுத்தத்தேவை இல்லை

'ஏதும் தெரியாத' இவர்கள். இப்பொழுது எடுக்கும் நடவடிக்கைகள் எல்லாம், அறியாமையின் விளைவு என்பதை நாம் உணர்வோம். ஆகவேதான் அவர்களைத் தெளிவடையச்செய்யும் பொறுப்பை ஏற்றிருக்கிறோம். நமக்கிருக்கிற பணிகள் பல—ஆனாலும் 'தெரியாத' மந்திரிகளுக்குப் பாடச்சொல்லிக் கொடுக்க வேண்டியவர்களாகவும் இருக்கிறோம் என்பதை மறக்கவில்லை.

உறுப்பினர்களுக்கு 'உபதேசம்' புரியும் மந்திரியாருக்கு நாம் சொல்கிறோம். தெரியவில்லையெனால், தெரிந்துகொள்ளுங்கள், தெளிவிக்கத் தயாராக இருக்கிறோம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம். தெரியவில்லை என்று கூறுவதால் உங்களுக்கும் வெட்கம், இவ்வளவு தெளிவாக எடுத்துரைத்தும் இவர்களுக்குப் புரியவில்லையே, இவர்களின் சிந்தனை 'மகாமந்தமோ' என்ற சந்தேகம் எங்களுக்கு இந்த இரண்டும் கூடாது என்பதுதான் நம் ஆசை.

——

முன்னேற்றம் நம் மூச்சு

நாடெங்கும் அதுவே பேச்சு

மாணவரிடையே அறிஞர்கள்

பூங்கா நகர் மாணவ முன்னேற்ற இல்லத்தின் முதல் ஆண்டு விழா, 26—11—50-ல் ஒற்றைவாடை தியேட்டருக்கருகிலுள்ள அம்மன் கோவில் தெருவில் வெகு விமரிசையாக நடந்தது விழாவிற்கு தோழர் நாரணதுரைக்கண்ணன் தலைமை தாங்கினார். தோழர்கள் விழாவில் பன்மொழிப்புலவர் அப்பாதுரை, கவுன்சிலர் நமசிவாயபாரதி, சி. என். அண்ணாதுரை, ஆகியோர் கலந்து கொண்டனர்.

நாரணதுரைக்கண்ணன் தலைமை வகித்துப் பேசுகையில், கருத்து வேற்றுமைகள் பல இருப்பினும் பொது மேடைகளில் அதைப் பாராட்டாமல் பொது நோக்குடன் அரசியல் தலைவர்கள் பேச முன்வர வேண்டுமென்றும், மேற்படி இல்லத்தார் இத்தகைய கருத்துகொண்டு மிக நெருக்கடியான கட்டத்தில் உழைத்து இம்மாதிரியான கூட்டத்தை நடத்தியமைப் பற்றி நான் பெருமகிழ்வு கொள்ளுவதாகக் கூறினார்.

அறிஞர். கா. அப்பாதுரை பேசுகையில் கடமையை உணர்ந்து தமிழ் நாட்டிலுள்ள மாணவர்கள் அரசியல் கட்சிகளில் பங்கு கொள்ளாமல் தமிழுக்காகவும், சமுதாயத்திற்காகவும் பாடுபட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

கவுன்சிலர், நமசிவாயபாரதி, பொருளாதாரத்தில் கீழ்நிலையில் இருப்பவர்களின் தொண்டை தற்போதைய அரசியலார் உதாசீனம் செய்வது வருந்தத்தக்கது என்று கூறி இதர கட்சி நாடகங்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கலந்து கொள்வதை அரசியலார் தடுப்பதை வன்மையாகக் கண்டித்துப்பேசினார்.

செயலாளர் வி-ஏ. முருகந்தம் இல்லத்தின் ஆண்டுவிழாக் குறிப்பை படித்து தோழர் அண்ணாதுரை பேசும்பொழுது, முன்னேற்றத்தை விரும்பாத எந்த மனிதனும் உலகத்தில் இன்றையநிலையையெய்தி இருக்க முடியாது. ஆனால் நம் துர்ப்பாக்கியமான இந்நாட்டில் முன்னேற்றம் என்பது மற்ற நாடுகளைப்போல் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று விட்டதினால் உலகம் மாயை என்றும் இகத்தை மறந்து பரத்தை நாடி பின்னேற்றத்திற்கு செல்லும் மக்களை பகுத்தறிவு ஊட்டி முன்னேற்றத்திற்கு அழைத்து செல்லுவதுதான் தங்கள் பணி என்றும், நம்நாட்டின் மாணவர்கள் மனவளம் பெருகக்கூடிய புத்தகங்களைப்படிக்க வேண்டும் நாட்டை புத்தலகப் பூங்காவாக ஆக்கவேண்டும் என்றும் முன்னேற்றத்திற்காக உழைக்கும் இல்லத்தின் மாணவர்களைப் பாராட்டி தன்உரையை முடித்தார்.

பின்னர் இல்லத்தின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

திருச்சி உழவர் மாநாடு

உழவர்படை கிளம்பும்

கிராமங்களில் சுற்றுப்பயணம்

ஜனவரி 4ந் தேதி முதல் திருச்சி மாவட்டத்தின் நான்கு முக்கிய ஊர்களிலிருந்து "உழவர் படை" ஒன்று புறப்பட்டு கால்நடையாக 20ந் தேதியன்று திருச்சி வந்து சேரும். படை வரும் வழிகளில் சிற்றுண்டி, உணவு, தங்குமிடம் முதலிய காரியங்களை உழவர் மாநாட்டு வரவேற்புக் கமிட்டியார் கவனித்துக்கொள்வார்கள். மேற்படி உழவர்படை, தினசரி ஐந்து, ஆறு மைல்கள் நடந்தே ஒவ்வொரு கிராமத்தையும் கடந்து வருவர் வழியிலுள்ள கிராமங்களில் கிராம முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, உணவு உற்பத்திப் பெருக்கம் ஆகியவைகளைப் பற்றி மேற்படி படை பிரச்சாரம்செய்யவேண்டும். மேற்படி படையில் திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரகர்களும் கலந்து கொண்டு பணியாற்றவிருக்கிறார்கள்.

ஆகவே சுற்றுப்புற மாவட்டங்களிலுள்ள தோழர்கள் மேற்படி படையில் சேர்ந்து ஒத்துழைக்கக் கோருகிறோம்.

சேர விருப்புவோர் முழு முகவரியுடன் தெரிவிக்கவேண்டுகிறோம்.

உழவர் மாநாடு

கருணாநிதி பார்க்

தெப்பக்குளம், திருச்சி.

மலேயா
சாம்பசிவம் நிதி.

என்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டு திருச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் மலேயாசாம்பசிவத்துக்கு உதவி செய்யும் நோக்குடன் மேற்படி நிதிக் கமிட்டியினர் முயன்று வருகின்றனர். அம்முயற்சியில் எல்லோரது ஒத்துழைப்பையும் நல்க வேண்டுமென்று மேற்படி நிதிக் கமிட்டியின் தலைவர் தோழர் ஜமால் மொய்தீன் பி. ஏ., பி. எல்., (அட்வகேட் மேற்கு பொலினார் ரோடு—திருச்சி) தமிழ் நாட்டினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒரே முத்தம்

—*—

மு. கருணாநிதியின் இலக்கியச் சித்திரம்!

சுவைமிக்க உரையாடல்கள்!

சோபிதமிக்க கதையோட்டம்!!

விலை ரூ 1—0—0.

வியாபாரிகட்கு தக்க இலாபமுடன் எங்கள் செலவிலேயே அனுப்பி வைக்கிறோம்.

விற்பனையாளர்:— திராவிடன் பதிப்பகம்,

A. P. B. No. 18, வேலூர், N. A.

விலங்கிட்டனர், நடத்திச் சென்றனர்

காங்கிரஸ் ஆட்சியில் இந்தக் கொடுமை!

வீரர்கள் எழுவரும், திருச்சி சிறையில்

நாரணமங்கல வழக்கு எதிரொலி

அரியலூர் டிச. 8:- இன்று நாரணமங்கலம் 144 தடையுத்தரவை மீறி, பேச்சுரிமை காத்த பெருவீரர்களெழுவரையும் தோழர்கள் ஏ. பி. தர்மலிங்கம், என். சாம்பு, அண்ணாமலை, எஸ். வி. லிங்கம், முத்துகிருஷ்ணன், வீரர்களின் பெற்றோர்கள், மேலப்பழுவூர் செல்லப்பா மற்றும் பலர் சென்று கண்டனர். தோழர்கள் முகமலர்ச்சியுடனிருக்கிறார்கள்.

தண்டனை பெற்ற செய்தியை துண்டு வெளியீடுகள் மூலம் திருச்சி, நாரணமங்கலம், துறையூர், செயங்கொண்டம், பெரம்பலூர், லால்குடி, டால்மியா, திருமானூர் இன்னும் பல ஊர்களில் பரப்பப்பட்டது. திருச்சி மாவட்டத்தின் முக்கிய ஊர்களுக்கு நேற்று இரவே செய்தி அனுப்பப்பட்டு, அங்கங்கே பெரிய போர்டுகள் மூலம் விளம்பரப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இரண்டு குற்றங்களைச் சாட்டிற்று, இந்த அரசாங்கம்—ஒவ்வொன்றிற்கும் மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை—ஆனால் ஒரே சமயத்தில் இரண்டு தண்டனைகளையும் அனுபவிக்க உத்திரவிடப்பட்டது.

இன்று பகல் 12-30 மணிக்கு அரியலூர் சப்ஜெயிலிலிருந்து, கண்ணியத்தை கேடயமாகக் கொண்ட, நமது தோழர்கள்—ஆணவ மிகுந்த ஆட்சியாளர் வீசிய அடக்கு முறையை அலட்சியப்படுத்தி அறப்போர் தொடுத்த ஆர்வமிக்க அடலேறுகள் எழுவரையும், கரங்களிலே விலங்குகளிட்டு, நடத்தியே இரயிலடிக்கு அழைத்துச் சென்றனர். இந்தக் கோரக் காட்சி கருத்துள்ளோர் எவரையும் இரத்தக் கண்ணீர் வடிக்கத்தான் செய்யும். தோழர்களோ, கரங்களிலே விலங்கிட்டதைக் கண்டு அலட்சிய புன்னகை வீசி, நாட்டிற்காக நம் கடமையைச் செய்கிறோம் என்ற பெருமிதத்துடன் நடந்தனர்.

அரசியல் கைதிகள் அவர்கள்—ஆனாலும் விலங்கிட்டு, வீதி வழியே நடத்திச் சென்றனர். இந்த காட்டுமிராண்டிப் போக்கைக் கண்டு பொதுமக்கள் ஆத்திரப்பட்டனர். கண்ணியமிக்க அரசியல் அறிவு படைத்தவர் ஆச்சர்யப்பட்டனர். மாணவர்களோ, குமுறும் நெஞ்சுடன், கூடவே தொடர்ந்து சென்றனர். தோழர்களை, திருச்சி சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.

அன்று மாலை திருச்சி டவுன் ஸ்டேஷனில், சிறை செல்லும் தோழர்களை, திருச்சியிலுள்ள கழக பிரமுகர்கள், தொண்டர்கள், பெருவாரியாகக் கூடி வரவேற்றனர்.

தோழர்கள் எழுவரையும் பொன்மலை வரையில் இரயிலிலும், பிறகு சிறைச்சாலைவரை நடத்தியுமே அழைத்துச் சென்றனர்.

பொள்ளாச்சி பீடித் தொழிலாளர் முதல் மாநாட்டு விபரம்

26—11—50 தேதி பொள்ளாச்சி பீடித் தொழிலாளர் முதலாவது மாநாடு பகவான் டாக்கீசில் காலை 10 மணிக்கு மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. கோவை திரு. எஸ். சதாசிவம் மாநாட்டிற்குத் தலைமை வகித்து "தொழிலாளர்கள் கட்டுப்பாடாக இருப்பதுடன் திராவிட நாட்டை நச்சரித்து வரும் சமுதாய மூடப் பழக்க வழக்கங்களை வெட்டி வீழ்த்த வேண்டும்" என்று கூறினர். உடுமலை நகர சபைத் தலைவர் தோழர் எம். எஸ். கனகராசன் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் "அன்னிய நாட்டார் போட்டியிடாத தொழில் பீடித் தொழில் ஒன்றுதான்; இத்தொழிலாளர்கள் கட்டுப்பாடாக அணிவகுத்துத் தங்கள் உரிமையைக் கேட்க சங்கரீதியாக ஒன்று திரண்டதைப் பாராட்டுகிறேன்." என்று குறிப்பிட்டார்.

தோழர்கள் சி. பி. சிற்றரசு, கோபி ஜி. என். இராசு, ஆகியோர்கள் "திராவிட நாட்டுத் தொழிலாளர்கள் படும் அவதியைப் பற்றியும், வடநாட்டுச் சுரண்டல்களைப் பற்றியும், தடை போடுவதன் மூலம் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதும் காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலத்தைப் பற்றியும், குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகம், சென்னை தடியடி தாண்டவத்தைப் பற்றியும் விளக்கி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்கள். மாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் பி. என். இராமானுசம் அவை வரையும் வரவேற்றுப் பேசுகையில், "தொல்லைபடும் தொழிலாளர்கள் துயர் நீங்க வேண்டுமானால், — நாடு பிரிந்தாக வேண்டும்" என்று கூறினர். குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும் பொது விசாரணை வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், பாதுகாப்புக் கைதிகளை விடுதலை செய்யும்படியும், தொழிற் சங்க—தொழிலுறவு மசோதா கண்டித்தும், மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறிய பின் மாநாடு முடிந்தது. இதுவரை எந்த மாநாட்டிற்கும் கூடாதவகையில் கொட்டகையிலும், வெளியிலும் கூட்டம் கூடியிருந்தது. காலை தொழிலாளர்களின் மாபெரும் ஊர்வலம் இரயிலடியில் தலைவர்களை வரவேற்றது. மாலை தேர்நிலை வெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஜி. என். இராசு, கோபால், தமிழரசு ஆகியோர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

—

மாணவ அணிவகுப்பு

விருந்தம்பட்டு

23—9—50ல் திராவிடமுன்னேற்றக்கழக மாணவர்கள் கூடி, தோழியர் சத்தியவாணிமுத்து, மணி எழிலன் ஆகியோரை அழைப்பதெனத் தீர்மானித்தனர்.

கிருட்டினகிரி

28—9—50ல் உயர் நிலைப்பள்ளி மாணவமன்ற சார்பில் திரு. சுப்பிரமணியம் பி. ஏ., எல். டி., தலைமையில் நடந்தகூட்டத்தில், மறைந்த தமிழ்ப் பெரியார் மறைமலையடிகள்புகழ்பற்றி தோழர் இரா. பெ. இராமச்சந்திரனார் பேசினார். இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாயவரம்

10—10—50ல் தி. மு. மா. க. அமைப்புக்கூட்டம் தோழர் ஏ. சுவாமிநாதன் தலைமையில் நடந்தது. செயலாளர்:- செழியன், பொருள் உறுப்பினர்:- வாணன், அமைப்பாளர்:- இளங்கண்ணன், துணைச்செயலாளர்:- அனந்தன்,

செங்கற்பட்டு

18—10—50ல் தி. மு. மாணவர் கழக அமைப்புக் கூட்டத்தில் செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- தனசேகரன், பொருள் உறுப்பினர்:- சுந்தரம் வி. உறுப்பினர்:- விக்டர் அதிர்ஷ்டம்.

ஆர்க்காடு

22—10—50ல் தி. மு. மா. க. முதலாண்டு விழா தோழர் கிருட்டிணன் தலைமையில் நடந்தது. கழகக் கொடியை மணிஎழிலன் ஏற்றிவைத்தார். தோழர்கள் இளஞ்செழியன் கருத்தோவியன் பேசினர்.

கள்ளக்குறிச்சி

27—10—50ல் தி. மு. மா. கழக அமைப்புக் கூட்டம் நடந்தது. செயற்குழுவினர் விவரம்—செயலாளர்:- முத்து. சீனுவாசன், துணைச் செயலாளர்:- கே. இளஞ்செழியன், பொருள் உறுப்பினர்:- கே. செங்குட்டுவன், விளம்பர உறுப்பினர்:- கலைக் கண்ணன், மற்றைய செயற்குழுவினர் பதினைந்து பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலூர்

3—11—50ல் தி. மு. மா. கழகம் அமைக்கப்பட்டது. செயலாளர்:— பெரியசாமி, துணைச்செயலாளர்:— சுந்தரராசன், பொருள் உறுப்பினர்:- என். வேணு, விளம்பர உறுப்பினர்:- இராசரத்தினவேலு மற்றும் 21 பேர்கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சங்கரநயினார் கோவில்

11—11—50ல் தோழர் சங்கரநாராயணன் தலைமையில் தி. மு. மா. கழக அமைப்புக் கூட்டம் நடந்தது. தோழர்கள் மு. இராசாமணி, ஆறுமுகம், பேசினர். செயற்குழு தேர்தல் நடந்தது; செயலாளர்:- சங்கரநாராயணன், துணைச் செயலாளர்:— ஆறுமுகம், பொருள் உறுப்பினர்:- த. மீ. சுந்தரம், வி. உறுப்பினர்:— இரா. பழனிவேலு, சேதுராமையா மற்றும் பத்துபேர் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

மறைவு

மேட்டுப்பாளையம் தோழர் ந. இராமலிங்கம் அவர்களின் அருமை மனைவியார் 25-11-50ல் திடீரென இயற்கை எய்திய செய்தி கேட்டு பெரிதும் வருந்துகின்றோம்.

பொதுச் செயலாளர்

அண்ணாதுரை

—

8—12—50-ல் காஞ்சிபுரத்தை அடுத்த அய்யம்பேட்டையில், தி. மு. க. பொதுக்கூட்டம் வெகு விமரிசையாக நடந்தது. அய்யம்பேட்டையின் சுற்றுவட்டாரத்தோழர்கள் ஆயிரக்கணக்கில் கூடியிருந்தனர் ஏராளமான பெண்களும், கூட்டத்தின் நடவடிக்கைகளைக்காண வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னால் பலதோழர்கள் இயக்கப்பாடல்கள் பாடினர்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள், ஈழத்தடிகள், பட்டாசாமி. தில்லை-வில்லாளன் ஆகியோர் உடன்வர, காரில் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்தவுடன் மாலைகளிட்டு வரவேற்றனர்.

கூட்டத்திற்கு. தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமை வகித்தார். தோழர்கள் கே. டி. எஸ். மணி, தில்லை-வில்லாளன் பி. ஏ, (ஆனர்ஸ்) காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசியபிறகு, தோழர் அண்ணாதுரை, இன்றைய ஆட்சியாளரின் போக்கு, உணவு நிலைமை, சமுதாய புரட்சி ஆகியவை குறித்த மிக விளக்கமாகப் பேசினர். இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிதுமுடிந்தது.

9—12—50ல் வாலாஜாபாத்தில் குன்றத்தூர் வழக்கு நிதிக்காக நடந்த 'வேதனைக்குரல்' நாடக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

10—12—50ல் மதுராந்தகத்தில் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடந்தது. காலையிலிருந்தே, சுற்றுவட்டாரத்தோழர்கள், ஆயிரக்கணக்கில் வந்தவண்ணமே இருந்தனர்.

மாலை 5-30-மணிக்கு பொதுக் கூட்டம் தொடங்கியது. தோழர்கள் பலர் இயக்கப்பாடல்கள் பாடினர். செய்யூர் தோழர் சுதர்சனம் கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

காஞ்சியிலிருந்து பொதுச் செயலாளர், தோழர்கள் பஞ்சாட்சரம், புட்டாசாமி தில்லை-வில்லாளன் ஆகியோருடன் மாலை 7-மணிக்கு மதுராந்தகம் வந்தடைந்தார். கூடியிருந்த மக்கள் ஆரவாரத்தோடு வரவேற்றனர்.

பொதுச் செயலாளருக்கு பல கழகங்கள் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. மதுராந்தகம் செய்யூர் கழகங்கள் சார்பாக வரவேற்பிதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. தோழர்கள் தங்கவேலு, அழகரசு, காஞ்சி கல்யாணசுந்தரம், தில்லை-வில்லாளன் ஆகியோர்பேசிய பிறகு பொதுச்செயலாளர் அண்ணாதுரை நீண்டநேரம் இன்றைய ஆட்சியாளரின் கோணல்போக்கு டெல்லி தொடர்பால் திராவிடத்திற்கு ஏற்படும் துன்பங்கள், பிராமண சமூகத்தின் எதிர்கால போக்கு முதலியபல பொருள்பற்றி விரிவுரையாற்றினர்.

இரவு உணவிற்குப்பின் தோழர்களுடன் காஞ்சி வந்து சேர்ந்தார்.

"கிளர்ச்சி"

ஆசிரியர்கள்

இரா. சு. தங்கப்பழம்

எம். எஸ். சிவசாமி

1—1—51 முதல் மீண்டும் வெளிவருகிறது

நாடெங்கும் முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

'கிளர்ச்சி' அலுவலகம்

(Ad) சாத்தூர்.

திராவிட நாடு

ஞாயிறு] 17—12—50 [காஞ்சி

முதலமைச்சரின் முகாரி

—:x:—

போய்ப் பார்த்தேன்
புத்தி குழம்பினேன்!
சங்கடம் கண்டேன்,
சஞ்சலம் கொண்டேன்!
பயப்படுகிறேன்!!

ஆச்சரியகரமான சம்பவம், நமது முதலமைச்சருக்கு ஞானோதயம் ஏற்பட்டிருக்கிறது-புத்தருக்குப் போதிமரத்தடியில் ஏற்பட்டதாமே, அதுபோல! 'சஞ்சலம் தீர்த்தின்பமுற வெண்புறுவே-சங்கடம் தீர்க்க வழி காட்டுவாய் வெண்புறுவே!' என்று சோகக் குரல் எழுப்பி யிருக்கிறார்! 'என்ன செய்வது?' என்று பெருமூச்சால் பேசியிருக்கிறார்! 'எப்படி காலம் கடத்தப் போகிறோமோ?' என்று வேதனைப்பட்டிருக்கிறார்! 'இந்த நிலையைக் காணும்போது எதிர்காலம் பயங்கரமாயிருக்கிறதே' என்று பயப்பட்டிருக்கிறார்!

அவர் முதலமைச்சர்—ஆனாலும் இப்போதுதான் ஞானோதயம் அரும்பியிருக்கிறது! 'ஆலோலம்-ஆலோலம்' என்று புள்ளினங்களை விரட்டிக்கொண்டிருந்த வள்ளி, யானையைக் கண்டதும் கலங்கினாளாமே, அதுபோல இருக்கிறது நமது குமாரசாமியார் நிலை'

சிங்காரச் சென்னையில், கடலோரக்காற்று அடிக்க, கனதனவான்கள் 'வராந்தா'வை வட்டமிட்டு நிற்க, கட்சிப் பேர் சொல்லி மிரட்டுவோர் காத்து நிற்க-அதைக் கண்டு களைத்துப்போனதாலோ என்னவோ, வெளிக்கிளம்பி சுற்றிப் பார்த்தாராம்! வெளி மாவட்டங்களுக்குச் சென்று பார்த்ததில், நிலைமை விளங்கிற்றாம் — வேதனைப்பட்டிருக்கிறார் 'ஆலோல' இன்பத்தில் கிடந்த வள்ளி, யானையைக் கண்டதும் அலறினாளாமே, கதையில், அதைப்போல.

இந்த வாரம், முதலமைச்சர், மதுரை, சேலம் ஜில்லாக்களைச் சென்று பார்த்தாராம். பார்த்ததில் பயம் வருகிறதாம்! சங்கடத்தைக் கண்டதும் சஞ்சலம் வந்ததாம்! பயம் ஏற்பட்டுவிட்டதாம்! — கூறியிருக்கிறார், சென்னைக்குத் திரும்பி பத்திரிகா நிருபர்களைக் கண்ட போது.

பாவம், ராஜபாளையத்தாருக்கேற்பட்டிருக்கும் 'பயம்' பரிதாபத்துக்குரியதுதான். எவளாளர் கைகட்டி நிற்க, மில்லையும் தொழிலையும் பலர் கண்காணித்து நிற்க, பேலங்கியை இருபுறமும் விட்டுக்கொண்டு, மிடுக்கு நடையுடன் வீட்டுக்குள்ளே நடைபோட்டுப் பயிலவேண்டிய அவருக்கு, இந்தச் சங்கடம், சஞ்சலத்தையும் பயத்தையும் தந்ததில ஆச்சரியமில்லை!

ஆனால், தினசரி நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தும் பட்டினிக் குரலும், பரிதாபச் சாவும் குறித்துச் செய்திகள்—புகைப்படங்களோடு — வந்துகொண்டிருந்தும், ஏதோ புது உண்மையைக் கண்டுவிட்ட புத்தர்போல, 'சுற்றிப் பார்த்தேன்—துயரமுற்றேன்!' என்று பரிதாபச் சிந்து பாடுகிறாரே இப்போது அதைக் காணும்போதுதான் ஆச்சரியமாயிருக்கிறது!

காங்கிரஸ் மந்திரிகளுக்கு அனுபவம்தான் பஞ்சம் என்று எண்ணியிருந்தோம்!

ஆனால், நமது முதலமைச்சர், அதுமட்டுமல்ல, எங்களுக்கு அறிவு கூட அப்படித்தான்' என்று விளக்கம் தருகிறார், தனது வேதனை விருத்தமூலம்.

மதுரை மாவட்டங்களைச் சுற்றிப் பார்த்தாராம்.

உணவுநிலை, சீர் கேடாகயிருக்கிறதாம்

பருவக்காற்று படுமோசம் செய்துவிட்டதாம்.

பயமாயிருக்கிறதாம் — படுமோசமாக ஆகிவிடுமோ என்ற அச்சத்தால்.

—வெளியிட்டிருக்கிறார் வேதனையோடு, ஏதோ லண்டனிலிருந்து இப்போதுதான் வந்து இறங்கி இங்குள்ள நிலைமையைப் புரிந்துகொண்டவர் போல!

முதலமைச்சரின் 'முகாரி'யைக் கேட்டுக்கொண்டிருந்த நிருபர்களில் ஒருவர் கிண்டல் பேர்வழிபோலும். நாசூக்காக ஒரு கேள்வியைப் போட்டிருக்கிறார், "ஐயன்மீர்! மத்திய சர்க்காரின் போதிய உதவியில்லாவிடில் மக்களைக் காப்பாற்ற நம்மால் முடியாது அல்லவா?" என்று. நிருபரின் கேள்வி நல்லவேளையாக மந்திரியாரை "மந்த"மாக்கவில்லை. 'சஞ்சலம் தீர்த்தின்பமுற வெண்ணிலாவே—சந்தர்ப்பமிது வந்திடுவாய் வெண்ணிலாவே!' என்று கூவியழைப்பதுபோல,

மத்திய சர்க்காரே!
மத்திய சர்க்காரே!
மாப்பசி சூழ்ந்து
மனிதர்கள் சாவும்,
மரணக் காட்சி—
மனதைத் தீய்க்கிறது.
மத்திய சர்க்காரே,
மறவாதே, வா!
சந்தர்ப்பம் நினை;
சமயத்துக்கு உதவு!
சங்கடம் தீர்த்து
சஞ்சலம் போக்கிடு!
சரியாக உதவி,
சாக்காட்டைத் தவிர்!
தவிக்க விடாதே!
தமியேன் சகியேன்!!"

என்று சஞ்சலப் பாட்டு பாடியிருக்கிறார் — மத்திய சர்க்கார் என்று, நிருபர்களை நினைத்துக்கொண்டு.

நிருபர், மத்திய சர்க்கார் உதவியில்லாவிடில் இந்த நிலைமையைச் சமாளிப்பது, சாமான்யமானதா? என்று கேட்டிருக்கிறார்.

பதில் தந்த முதலமைச்சர்,
நமது நிலைமையை யுணர்ந்து,
அனுதாபம் வைத்து,
சரியான வகையில்,
சந்தர்ப்பம் அறிந்து,
போதிய உதவிகளை,
பொறுப்போடு

செய்யாவிடில், இந்த சர்க்காரால் இப்போதைய நிலைமையைச் சமாளிப்பது சாமான்யமானதல்ல-முடியாது என்று கூறியிருக்கிறார்.

முதலமைச்சரின் முகாரி, நாம் உணர்ந்ததுதான். 'மாகாண சர்க்காரால் ஏதும் முடியாது' — இது, அமைச்சரைவிட நமக்கு, நன்றாகப் புரியும்; தெரியும். ஆனால், இவர் நம்பும் மத்திய சர்க்கார், எந்த நிலையில் இருக்கிறது என்பதைப் பார்த்தால், குமாரசாமியாரைவிட நமக்கே அதிக பயம் ஏற்படுகிறது!

குமாரசாமியார், இப்போதுதான், அலறுகிறார். 'போய்ப் பார்த்தேன்—பயப்படுகிறேன்' என்று.

அவருக்கே, அப்படியென்றால் தினசரிப் பட்டினிச் சாவுகளைப் பார்க்கும் நமக்கும், மக்களுக்கும் எத்தகைய 'பேராபத்து' எதிர்காலத்தில் ஏற்படவிருக்கிறதோ, தெரியவில்லை!

மத்திய சர்க்கார் 'அனுதாபம்' காட்டினால், பஞ்சநிலையைப் போக்கிட முடியும்—இது, முதலமைச்சரின் நம்பிக்கை.

ஆனால், அவர் நம்பும் மத்திய சர்க்கார் எப்படியிருக்கிறது என்பதை அறியும்போதுதான் நமக்கு திகிலும் திகைப்பும் ஏற்படுகிறது.

முதலமைச்சர் தமது 'புது அனுபவத்தையும் புத்திசாலித்தனமான கருத்தையும்' வெளியிட்டதற்கு முதல் நாள் டிச. 12-ந் தேதி, பம்பாயிலே இந்திய உணவு மந்திரி பேசியிருக்கிறார்—அல்ல! அல்ல!!—எச்சரித்திருக்கிறார். பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது — The Governmant of India has warned Madras—அதாவது இந்திய சர்க்கார் சென்னையை எச்சரித்திருக்கிறது.

எச்சரிக்கை எதற்கு? "மாகாண சர்க்காரே, உங்களது மந்த நிலையைக் கண்டோம். மக்கள் பசியால் சாவது தெரிந்தும், வழிசெய்யாமல் தூங்கிக்கொண்டிருக்கிறீர்களே! ஒரு வார்த்தை எமக்குச் சொல்லியனுப்பலாகாதா? உமது தூங்குமூஞ்சித்தனம் எமது பொறுமையைச் சோதித்து விட்டது. அதோடு, எப்பொழுது பார்த்தாலும் சண்டைபோட்டுக் கொண்டிருக்கிறீர்கள். பிரகாசம் உங்கள்மீது லஞ்சப்பட்டியல் சமர்ப்பிக்கவும், நீங்கள் 'நான் யோக்கியன் - அவர்தான் பரம அயோக்கியன், என்று, தெருச் சண்டை போடுகிறீர்கள் சட்டசபையில்! இது தகாது-மக்கள் கஷ்டத்தைக் கவனியாது மதோன்மத்தமாகப் பேசிக்கிடப்பது அறிய எம்மால் சகிக்கமுடியவில்லை. இனிமேல் இப்படி நடந்தால் நடவடிக்கை எடுப்போம் என்று எச்சரிக்கிறோம்.!"

இந்தவகையைச் சேர்ந்ததல்ல, எச்சரிக்கை! கீழதிகாரி, தவறுதலாக நடந்தால் மேலதிகாரி எச்சரிப்பதும் சகஜம்! ஆனால், மேலதிகாரியென்று கூறிக்கொண்டு ஏராளமான அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் மேலிடமோ சென்னையை எச்சரிக்கை செய்திருக்கிறது!

"தங்களது மக்களைக்காப்பாற்ற சென்னை, மிக அதிகமான அளவில் மத்திய சர்க்காரை நம்புகிறது,, ஆகவே, சென்னையை எச்சரிக்கிறோம்"

எப்படியிருக்கிறது, கதை! சென்னை-மத்திய சர்க்காரை நம்புகிறதாம்-நம்புவதுதவறாம் - ஆகவே எச்சரிக்கை!

கனம் 'மகாத்மா, முன்ஷி, விடுத்திருக்கிறார் இந்த எச்சரிக்கையை, இந்திய சர்க்கார் சார்பில்: சென்னை பிரதமர் மத்திய சர்க்காரை நம்புகிறார்!

'திரும்பாதே, இங்கு' என்று மத்தியசர்க்கார் எச்சரிக்கிறது, அவரை!

முதலமைச்சர் முகாரி எழுப்புகிறார்-இந்திய சர்க்கார் 'ஏடா, பையா! எங்கேயாவது போடா!!' என்று மிரட்டுகிறது!

எச்சரிக்கை-வேடிக்கை நிரம்பிய விசித்திரம்! தாயின் நிலைமையில் இருப்பவள், தனயன் சோறு கேட்டால் எச்சரிக்கமாட்டாள்! துள்ளி வரும் கன்றுக்குப் பால் கொடுக்கத் தாய்ப் பசு தயங்காது! 'பிடி சோறு' இல்லையென்றாலும், பிச்சை யெடுத்தாவது குழந்தையின் பசியைப் போக்கத் தாய் தவிப்பாளே தவிர, தடுத்து விரட்டமாட்டாள்! வந்து ஒடுங்கும் கன்றை, பசுகூட விரட்டாது—குஞ்சு, வாயைத் திறந்தால் புள்ளினம்கூட கொத்தாது! எங்கேயிருந்தாவது கொண்டுவந்து தரும் இரை!

ஆனால், குழந்தையின் தாய்போல அதிகார வசதிகளைக் குவித்துக்கொண்டு 'நடிக்கும்' நம்ம இந்திய சர்க்கார், எச்சரிக்கிறது — சென்னையை!

முதலமைச்சர், மத்திய சர்க்கார் அனுதாபம் காட்டினால்தான் முடியும், பசியைத் தீர்க்க—என்று கூறுகிறார்.

ஆமாம்! அவர் விரும்பினாலும், வேண்டிய இடத்திலிருந்து, விரும்பிய பொருளை வாங்கும் அதிகாரம் அவரிடமில்லை அந்த 'அதிகாரம்' மத்திய சர்க்காருடையது—'இந்தியத் தாய்' உடையது!!

ஆனால், இந்தியத் தாயோ, மாற்றாந்தாய் போன்றுகூட அல்ல 'மனித மிருகம்' போல—பசியென்று அழும் பாலகனை மிரட்டுகிறாள்! விரட்டுகிறாள்!

சிக்கலான நிலை; நாட்டை 'வங்காளம்' ஆக்கும் தவிர்க்க முடியாத, கோர வலை.

கோரத்தை எதிர்பார்க்கிறேன்— என்கிறார், சென்னை முதலமைச்சர்.

'என்ன முடியும் என்றால், ஏதாவது செய்!' என்கிறது, இந்திய மாதா.

இந்த கேடுகெட்டநிலை எப்போது மாறுவது? 'இந்தியா'வை 'மாதா' என்றழைக்கும் மகானுபாவர்களைக் கேட்கிறோம். இது சரியா?

முதலமைச்சர் அழ, அவர் அழுகையைத் தீர்க்கும் அதிகாரம் படைத்த இந்திய சர்க்கார் மிரட்டுகிறதே?—இது சரியா?

யோசியுங்கள்—பசி போக்க இயலாத சர்க்கார் பாரினில் இருந்தாலென்ன, போனாலென்ன!

பட்டினி பார்த்தும் இரங்காத 'பாவிகள்' என்று பெயர் வாங்கவும் துணிந்த 'படுமோசக் கும்பல்'லுடன் ஒட்டிக் கிடப்பதால் பலன் என்ன? நாடு-சுடுகாடாகத்தான் சுதந்திரமா? சுயராஜ்யமா? அகில தேசியமா? யோசியுங்கள்! நன்றாக யோசியுங்கள்!!

8-ம் பக்கத் தொடர்ச்சி

தூர் வழக்கு நிதிக்கு, எனது நாடக சபை நண்பர்கள் சார்பில் காணிக்கையாகத் தருகிறேன்" என்று கூறி, பொதுச் செயலாளர் சி. என். ஏ. விடம் ரூ. 1000 கொண்ட பணமுடிப்பைத் தந்தார்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, "நாடகத்தைத் தீட்டிய நண்பர் கருணாநிதியையும் முக்கிய பாத்திரமேற்று நடித்த புலவர் குழந்தையா முதலியோரையும் பாராட்டிப் பேசுகையில், "இந்த நாடகத்தில் நடித்தவர்களைப் புகழ்ந்து பேசினால் அது என்னை நானே புகழ்ந்து கொள்வதாகும்! ஏனென்றால் இந்த நாடகத்தில் பொறுப்பேற்ற அத்தனை பேரும் எனது தம்பிமார்கள்! தத்தமது வாழ்வைத் தத்தம்செய்துவிட்டு என்னோடு ஒத்துழைத்து, நாட்டுக்குப் பணி புரியும் நல்லதம்பிகள்! இவர்கள் பணியை நான் மட்டுமல்ல—நாடே மறக்காது" என்று குறிப்பிட்டு, புகழ்ந்துரைத்தார்.

நமது நன்றி

நாடக வெற்றிக்கு ஒத்துழைத்த எல்லோரும் நாட்டின் பாராட்டுக்குரியவர்கள். குறிப்பாக காஞ்சி ஆர். கே. மூர்த்தி, வி. புட்டாசாமி, ராஜா டாக்கீஸ் உரிமையாளர் டபுள்யூ. கே. தேவராசன், இராசாபாதர், நாகராஜன், காஞ்சி. சுந்தரேசன் ஆகியோரது பெரும்பணியை நம்மால் மறக்கமுடியாது. அவர்கட்கு எத்தனை நன்றி செலுத்தினாலும் அடங்காது.

நாடக டிக்கெட் விற்பனையில் பங்கேற்று வெற்றிகரமாக்கிய மாவட்டக் கழக முன்னணி வீரர்களுக்கு, குறிப்பாக குன்றத்தூர், காஞ்சிபுரம் மதுராந்தகம், செங்கற்பட்டு, திருக்குழுக்குன்றம் முதலிய கழக வீரர்களுக்கு—நமது நெஞ்சுகந்த, அன்பு கலந்த, நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

நாடக வசூலில் ரூ 1000 குன்றத்தூர் வழக்குநிதிக்குப் போக ரூ 500 செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்துக்கென அளிக்கப்பட்டிருக்கிறது.

✻

நெசவாளி மக்கள் தவிக்கின்றனர்

ஆளவந்தார் 'பேசாமடந்தை'யாகின்றனர்!

பட்டினி ஊர்வலம்

நெசவாளிகள் படுந்துயரம் சகிக்க முடியாதது. துயரப்படுவர் சோம்பேறிகள் அல்ல; பாடுபடும் பாட்டாளிகள் பட்டினியால் துடிக்கின்றனர்! பட்டினி என்றால் ஒருவேளை இருவேளையல்ல; நாள்முழுதும் பட்டினி; வாரமெல்லாம் பட்டினி; மாதமெல்லாம் பட்டினி; காலமெல்லாம் பட்டினி; எங்கும் பட்டினி; எல்லோரும் பட்டினி; ஆண்கள் பட்டினி; பெண்கள் பட்டினி; பெரியவர்கள் பட்டினி; குழந்தைகள் பட்டினி; தற்கொலை செய்துகொண்டவர்—செய்ய முயற்சிபவர் ஏராளம்! ஆசை மனையாளை, அன்புக் குழந்தைகளை தெருவில் தவிக்கவிட்டு, தேசாந்திரியானவர் ஏராளம்!! இதற்கெல்லாம் காரணம் என்ன?

மத்திய அரசாங்க மமதையால், சென்னை அரசாங்கச் செயலற்றதன்மையால், நெசவுக்கு 'மூலப்பொருள்' நூல் கிடைக்காமல் தெருவில் விடப்பட்டனர். எனவே, 'கிளர்ச்சி' செய்ய முன்வாருங்கள்! நாம் வாழப் பிறந்தோம்! சாகமாட்டோம்! செத்தால் போராடிச்சாவோம்!!! என்று சூளுரைத்து ஆண்மையுடன் வாருங்கள். 9—12—50ல் மாலை 4-மணிக்கு சாலியர் பாவடித் தோப்பிலிருந்து, தோழர் எம்-எஸ்- இராமசாமி தலைமையில் புறப்பட்டு, அங்கேயே திரும்பிவரும் பட்டினி ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும்கலந்து கொள்ளுங்கள். 7-மணிக்கு பொதுக் கூட்டம்நடைபெறும்.

சோம்பவேண்டாம். வெட்கப்பட வேண்டாம். "பட்டினி என்று தெருவில் அலைவதா?" என்று நினையாதீர்கள். அரசாங்கம் நமது நிலைமையை உணர, நம் குறைதீர எல்லோரும்—ஆண் பெண் குழந்தைகளுட்பட ஊர்வலத்தில் கலந்துகொள்ளுங்கள். கிளர்ச்சி இன்றேல் வளர்ச்சி இல்லை!

இப்படி அறிக்கை விடப்படுவது, கண்டு நாம் வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம். ஒரு சுதந்திர சர்க்காரில் இந்த துண்டறிக்கை விட வேண்டிய நிலையிருக்கிறது என்றால் ஆட்சியாளர் நாணித் தலை குனிய வேண்டும்.

அருப்புக்கோட்டையில், மதுரை பாவு கைத்தறி நெசவாளர் சங்கம், இந்த பட்டினி ஊர்வலத்தை நடத்திக் காட்டியிருக்கிறது. வேதனை, வேதனை!!

சேலத்தை 'பஞ்சப் பிரதேசமாக்குக!'

சேலம் மார்க்கட் மைதானத்தில் 4—12 50-ல் தோழர் ஏ. சித்தையன் தலைமையில் நடந்த கைத்தறி நெசவாளர் பொதுக் கூட்டத்தில் கே. கே. பூர்ணையா பேசினார்.

பொதுக் கூட்டத்தில் தொழில் மந்திரியாருக்கு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன.

வேலையில்லாமையினாலும், நூலில்லாமையாலும், ஆயிரக்கணக்கான நெசவாளிக் குடும்பத்தினர் சொல்ல முடியாதக் கொடுமைக்காளாகிறார்கள். தாங்கள் வாழும் பகுதியிலேயே நூல் விநியோகம் சரியில்லாததால், அகதிகளாக, நெசவாளிக் குடும்பங்கள் அலைகிறார்கள் அவர்கள் செய்யாத வேலையில்லை. இருந்தும் பட்டினி கிடக்காத நாளுமில்லை. பலர் பிச்சை யெடுக்கின்றனர். சிலர் சாவையும் தழுவிடும் நிலையிலுள்ளனர். இந்தக் கொடுமையை, மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் கவனிக்கவே இல்லை. இந்த நிலை நீடிக்குமானால், சர்க்காரால் சமாளிக்க முடியாத பயங்கர நிலை பிறந்து விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல ஏற்படும் என்பது உறுதி. மாவட்டத் தலைமையதிகாரி கலெக்டர், இதற்கு உடன் நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும். மாகாண சர்க்கார், சேலத்தை 'பஞ்சப் பிரதேசம்' எனத் தீர்மானித்து அதற்குரிய நடவடிக்கைகளை உடனே எடுக்கவேண்டும். இப்படித் தீர்மானித்து, இந்த ஆட்சியாளரின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. படிக்கும் நமக்கு நெஞ்சம் நடுங்குகிறது – பாராளும் அவர்களுக்கு பதட்டம் ஏதும் வந்ததாகத் தெரியவில்லையே!

திராவிடநாடு
பொங்கல் மலர்

எழுச்சியுலகின் எண்ணக் குவியல்.
சிந்தனை வெள்ளம் தேக்கும் மாக்கடல்.
கருத்தைப் பறிக்கும் சித்திரக் குவை.

*

சிறந்த முறையில், புதிய வகையில் இந்த ஆண்டு பொங்கல் மலர் மிளிரும்.

*

சி. என், ஏவின் புதிய, ஆராய்ச்சிக் கட்டுரை.

*

சிறு கதைகள் அத்தனையும் தேன் சொட்டும் சிந்தனை விளக்கங்கள்.

*

அறிவொளியில் நடப்போருக்கு அரிய வாய்ப்பு.

*

எவ்வளவு இதழ் தேவை என்பதை 1—1—51-க்குள் எழுதி அனுப்புக.

விலை 0—8—0

ஏஜண்டுகள், குறித்த தேதிக்குள், தேவையான பிரதிகளைத் தெரிவிக்கவும்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டு பிரிவினைப் போரிலும் கலந்து கொள்ளப் போகிறார்கள்.

இன்றைய காங்கிரஸ் மந்திரிகள், நாளைய போராட்ட தளபதிகள்!

இன்றைக்கு எதிர்ப்புக் கமிட்டி 'ஏசல் தூதர்கள்'நாளைக்குநம்போர்ச் சேனை வீரர்களாவார்கள்!

சென்னை, இன்று வேதனைத் தீயிலே சிக்கிவிட்டது. டெல்லி, மூட்டிவிட்டதீ அவியவில்லை மேலும், மேலும் அத்தீ பரவவே, வழி செய்யப்படுகிறது

நெசவாளிக்கு நூலும் கொடுக்கவில்லை-தீ வளர்கிறது-ஆகவேதான், தீபனைப்புத்திட்டமாக திராவிட நாட்டுப் பிரிவினையைக் கூறியிருக்கிறார், தோழர் நாகராச மணியகாரர்.

தோழர் பி-எஸ்-மூர்த்தி மேலும் ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார். இன்று நெசவாளித் தோழர்களுக்கு ஏற்பட்டுள்ள பயங்கர நிலையை எடுத்துக்காட்ட அங்கங்கே பட்டினி ஊர்வலம் நடத்துகிறார்கள். இதனை, மந்திரியார் டெல்லிக்கு பறந்து சென்று மத்தியசர்க்காருக்கு விளக்க வேண்டும்—இல்லாவிட்டால் பட்டினி ஊர்வலம், பயங்கரக்கோப ஊர்வலமாக மாறிவிடும்என்று கூறியுள்ளார்.

இவரும் காக்கிநாடாவைச்சேர்ந்த காங்கிரஸ்காரர்.

தீ பரவுகிறது!—முன்னவர், அவி யென்று சொல்லிவிட்டார். அடுத்தவர், மந்திரியை, பறந்து சென்று கடைசி எச்சரிக்கையைத்தெரிவித்து விடுங்கள் என்கிறார்.

ஆம், எதிர்பார்த்தது, இவ்வளவு விரைவிலேயே நடப்பதைக் காண மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று, பிரிந்துவிட வேண்டியது தான் என்று ஒருகுரல் கேட்கிறது! நாள் நாளாக, ஒருகுரல் பத்தாகும், பத்து நூறாகும்,பிறகு சட்டசபையே சேர்ந்து ஒருமுகமாகக் கூறும்! ஆகவே நாம், நாட்டு மக்கள் அவர்கள் பிரதிநிதிகள் இனி இக்குரலை எழுப்புபவர்களாகவே இருக்கும்படிச்செய்யும் பெரும்பணியிலே ஈடுபடுவோம். இதுவரையிலும் அதனையே செய்தோம் — இனியும் அதனையே செய்வோம்.

ஒரு சேதி!

"சிரிப்பாய் சிரிக்கிறதே, தெரியுமா அண்ணா?"

"எது தம்பி?"

"சென்னை காங்கிரஸ் மந்திரிகள் விஷயம்தான்"

"அவர்களின் கையாலாகாத் தனம்தானே!"

"மக்களை வறுமையால் வாட விட்டு பசியால் மடியச் செய்கிறார்களே, அதையல்ல, நான் சொல்வது!"

"பின், எதை?"

"இலஞ்சம் வாங்குவது, வரிப் பணத்தை எடுத்து தங்கள் சொந்தக் காரர்களுக்கு வாரியிறைத்தது, இஷ்டம்போல் தர்பார் நடத்தியது........."

"பிரகாசம்தகராறுதானே, தெரியுமே! அதற்கு மந்திரிகள் பதில் சொல்லியிருக்கிறார்களே பார்த்தாயோ"

"பார்த்தேன் அண்ணா! சிரிப்பும் ஆத்திரமும் வருகிறது"

"ஏன், தம்பி!"

"பிரகாசம் குற்றஞ் சுமத்துகிறார். அதை மறுக்கும் மந்திரிகள் பிரகாசம் செய்த அடாபிடிகளைச் சொல்கிறார்கள். ஒருவர் திருடன் என்கிறார்—அதைமறுப்பவர் மகா திருடன் நீ என்று சொல்கிறார்."

"இரண்டு ஆசாமிகளும் காங்கிரஸ்காரர்கள்தானே?"

"ஆமாம், அண்ணா! ஒரே கட்சியினர்தான் -- ஆனாலும் உதைத்துக் கொள்கிறார்கள்"

"என்ன காரணமிருக்கும்?"

"பதவிப் போட்டி, மந்திரி பீட ஆசை; முதலியவைதான்"

"அப்படியானால் இந்தச் செய்தியைப் பார்த்தாயோ?"

"எது? டிச 9ந்தேதி சட்ட சபையில் கஸ்தூரி சுப்பா ராவ் பேசினாரே, 'சென்னை மந்திரிகள் மீது சாட்டப்பட்டிருக்கும் இலஞ்ச ஊழல் வழக்குகள் பார்ப்பன வக்கீல்கள் கூடிச் செய்த சதி யென்று கூறப்படுகிறது- தற்போதுள்ள மந்திரி சபையிலிருக்கும் பார்ப்பனரல்லாத, இளைஞர்களான மந்திரிகளை அகற்றும் சதிச் செயலென்றே பேசப்படுகிறது' என்பதா?'

"ஆமாம்!"

"தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தானே தெரியும்! நாட்டு அம்பலமாகும்போது உண்மைகள் வெளியாகின்றன- கஸ்தூரி சுப்பா ராவ்—எதிர்க்கட்சிக்காரரோ?"

"இல்லை! காங்கிரஸ் எம்-எல்-ஏ!"

நடக்க இருப்பவை

16-12—50-ல் குறிஞ்சிப்பாடியில் டி. வி. சாமி—சாவித்திரி திருமணத்தில் தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. பேசுவார்.

17—12—50ல் செயங்கோண்டத்தில் தோழர் ஏ. மெத்துசலா தலைமையில் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், தஞ்சை. ஏ. கே. வேலன், குத்தாலம் என். சி. பன்னீர் செல்வம் பேசுவர்.

17—12—50ல் கோளத்தூரில், தி. மு. க. ஆண்டு விழாவில் தோழர்கள் ஏ. சித்தையன், கோ. பி. ஜி. என்! ராசு பேசுவர்.

17—12—50-ல் ஆர்க்காட்டில் 10-12-50ல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட கூட்டம் நடைபெறும். காலையில் செட்டித்தெரு 16-ம் எண் நாடார்: இல்லத்தில் தோழர் சி. பி. சுற்றாசு தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெறும். மாலையில் வே. தா. செயராமன் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ப. து. ஆதிகேசவன், ஆர். மணிவண்ணன் பேசுவர்.

17—12—50-ல் சென்னை தோழமைக் கழகத்தாரின் சொற்பயிற்சிக் குழு சார்பில் காலை 10-மணிக்கு 83, தையப்பமுதலித் தெருவில் தோழர் எஸ். கரபதி தலைமையில் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

17—12—50-ல் கோவை, லட்சுமி மைன்மில்லில் மாலை 7-மணிக்கு மேற்கு வட்ட தி. மு. கழக நிர்வாகக் குழு கூட்டம் நடைபெறும் உறுப்பினர்கள் அனைவரும் வரும்படி வேண்டப்படுகிறார்கள்.

17-12-50-ல் கோவை மாவட்ட தி. மு. க. செயற்குழு, காலை 10-மணிக்கு கோவை நகரக்கழக கட்டிடத்தில் கூடி, பல முக்கிய விஷயங்களை ஆராயும். மாவட்ட உறுப்பினர்கள் அனைவரும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

18-12-50ல் சின்னசேலத்தில் தி மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. வே. கி. சம்பத், ஈரோடு. எஸ். அப்பாவு பேசுவர்.

18—12—50ல் காசிமேசபுரம் (திருக்குற்றாலம்) தி. மு. க. பொதுக் கூட்டத்தில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. ஆ. திராவிடமணி, கே. செண்பகம் பேசுவர்.

—X—

மொழி ஏகாதிபத்தியம்

டெல்லி பார்லிமெண்டிலே, வழக்கமாக ஆங்கிலத்திலே பேசுகிற தோழர் ஐஸ்பத்ராய்கபூர், இந்தியிலே பேசினாராம்! உடனே, தோழர் டி. இராமலிங்கம், இந்தியிலே ஏன் பேசவேண்டும், இந்தி தெரியாத எங்களை விரட்டிவிட வேண்டுமென்பது தங்கள் கருத்தோ என்றாராம்! சபாநாயகர், உறுப்பினர்கள், ஆங்கிலத்திலும் பேசலாம், இந்தியிலும் பேசலாம் என்று குறிப்பிட்டாராம். அதனைத் தொடர்ந்து தியாகி, இந்தியை விரைவிலே கற்றுக் கொள்ளுங்கள் என்றாராம்.

இந்தி ஏகாதிபத்தியம் உருவாகிக் கொண்டே வருகிறது. அதனுடைய 'பேய்க்குரல்' இடையிடையே கேட்டுக் கொண்டுதானிருக்கிறது. அதனைத் தென்னாட்டார், உணர்ந்தே எதிர்த்தனர். இருந்தும், இந்தி, எதிர்காலத்தில் ஆடப்போகிற வெறிக் கூத்திற்கு, இப்பொழுது பல ஒத்திகைகள் நடைபெறுகின்றன. அதுதான், தாண்டனார், இந்தியிலே கணக்கு எழுதச் சொல்வதும், தியாகியார், இந்தியை மிக விரைவிலேயே தென்னாட்டார் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதும்! என் செய்வது? முடியும், பிடியும் அவர்களிடம்! ஆட்டுகிறார்கள் ஆடுகிறோம். ஆனாலும், ஏகாதிபத்தியம் எதுவரினும், மொழியானாலும், ஆட்சியானாலும். என்றும் எங்கும் நீண்டநாள் வாழ்ந்ததில்லை இதனை மட்டும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

✻

கோவை தி. மு. மா. க.
அழைப்பு அறிக்கை

மாநில திராவிட மாணவர் மாநாட்டினை யொட்டி கோவை மாவட்டமெங்கும் மாணவர் முன்னேற்றக் கழகத்தின் கிளைகளைப் பரப்பி திராவிட சமுதாய முன்னேற்ற வேலைகளைத் தொடர்ந்து நடத்த கோவை மாவட்டத்தைச் சார்ந்த மாணவர்கள், மாணவர் கழகங்களைத் தோற்றுவித்து கோவை மாணவர் கழகத்திற்கு அறிவிக்க வேண்டுகிறேன். அமைக்கப்படுகின்ற கழகங்கள் பற்றிய குறிப்புகளையும் கோவைக் கழகத்திற்கு அறிவிக்கவும். தொடர்ந்து பல வேலைகள் இம்மாவட்டத்தில் நடைபெறவேண்டியிருப்பதால் மாணவத் தோழர்கள் அனைவரும் ஒத்துழைத்துப் பணியாற்ற முன்வரவும் வேண்டுகிறேன் என மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துணைச்செயலாளர் சி. டி. தண்டபாணி அறிவிக்கிறார்.

முகவரி:

சி. டி. தண்டபாணி
19/25, தாசே கவுடர் சந்து,
கோயமுத்தூர்.

புதுக் கழகங்கள்

குருராயப்பேட்டையில் 22-11-50ல் தி- மு- க- கிளை நிறுவப்பட்டது- செயற்குழுவினர் விவரம்—செயலாளர்:- கு- சி- இராமசாமி, துணைச் செயலாளர்:- மொ. ச- கோபாலன், பொருள் உறுப்பினர்:- கு- சிவாநந்தன், விளம்பர உறுப்பினர்:- பா- கோ- குப்புசாமி மற்றைய செயற்குழுவினர்:- கெ. ச. நாகரத்தினம், முருகேசன், ஏழுமலை, சண்முகம், கேசவ பணிக்கர், முனுசாமி, சுப்பிரமணியன்.

அழங்கா நல்லூரில் 13-11-50ல் தி- மு- க- கிளை நிறுவப்பட்டது.

பரங்கிப்பேட்டையில் 30-10-50ல் தி- மு- க- கிளை நிறுவப்பட்டது.

அணுகுண்டு வேண்டவே வேண்டாம்!

அமெரிக்கா துடிக்கிறது

இந்தியா தூங்கலாமா?

உலகம், அமைதி என்கிறது—அமெரிக்கா, அணுகுண்டு என்கிறது! போர் என்றாலே, கூடாது, கூடாது என்று கூறுகின்றனர் நல்லவர்கள். எனினும், வீசிடுவேன் அணுகுண்டு என்று விபரீதப்பேச்சை வீசிடுகிறது அமெரிக்கா.

அமெரிக்கா ஒரு விஷ சிலந்தி—தனது டாலர் வலைபால், நாடுகள் பலவற்றை தனது ஏகாதிபத்திய கூட்டிலே சிக்கவைத்து சீரழித்து வருகிறது. அதன் 'விசுவரூபம்' தான், இன்று கொரியாவிலே அணுகுண்டு வீசப்போகிறேன் என்ற மிரட்டல்.

விஞ்ஞானம் செய்யும் விநோதங்கள் பல—அவை, மனிதனது வாழ்விலே வளத்தைப் புகுத்தப் பயன்படுத்துவதே இல்லை என்று கூறிடும் நிலையிலே உள்ளது. ஆக்க சக்திக்கானவை, மிக மிகக் குறைவு—அழிக்கும் சக்திக்கான பொருள்கள் ஆயிரமாயிரம், இன்றைய விஞ்ஞானத்தின் விளைவாக அறுவடை செய்யப்பட்டுள்ளன! அறிவு, ஆக்கவேலையில் ஈடுபடுத்தப்பட்டால் எத்துணை சிறப்பு பெறும். அதனை மறந்து, அந்த நல்லதொரு பெரு நோக்கை அலட்சியப்படுத்திவிட்டு, 'ஊழிக் கூத்து' ஆடிடும் போக்கு கூடாது.

விஞ்ஞானம் ஒரு வளரும் கலை—விதவிதமான அற்புதங்களையெல்லாம் தந்துள்ளது. ஆனாலும், பயங்கர படைக்கலங்களையும் தந்துவிட்டது. விஞ்ஞானத்தின் குறையல்ல அது — அதனைத் துணையாக்கிடும் மனித மூளையின் விசித்திரப் போக்குதான் அதற்குக் காரணம்!

அழிக்கும் கடவுளின், மூன்றாவது கண்ணின் பார்வை, உலகை சாம்பலாக்கும் என்றிடும் புராணங்கள்—பிரளய காலமே வந்துவிடும் என்று பேசித்திரிவர், நாவாணிபர்கள்! ஆனால், விஞ்ஞானத்தின் துணையினால், மனிதன், அழிக்கும் கடவுளையே சேர்த்தழிக்கும் அணுகுண்டையே கண்டுபிடித்துவிட்டான்.

அணுகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, உலகு அதைப் பற்றியே பேச ஆரம்பித்தது. ஏனெனில், சென்ற உலக யுத்தத்திலே, ஜப்பான் பகுதியிலே அது வீசப்பட்டபொழுது அதன் விளைவு, எவ்வளவு விபரீதமானது என்பது புரிந்தது ஆகவேதான், அந்த அணுகுண்டு பற்றிய சர்ச்சைகளில் உலக நாடுகள் வெகு அக்கரையோடு கலந்துகொண்டன. அதனைப் பயன்படுத்தும், அதிகம்செய்யும் முயற்சிகளெல்லாம் ஒரு பொது அமைப்பின் கீழ்கொண்டு வரவும், அந்த பேராபத்திலிருந்து உலகை தப்புவிக்க, இதயம் படைத்த எல்லோரும் பாடுபட்டனர். ஆனாலும் அமெரிக்கா, வீசப்போகிறேன் என்று வீரம் பேசுகிறது.

'வல்லவனுக்கு, வல்லவன் உண்டு வையகத்தில்' என்பதைப் போல, அணுகுண்டானால், காஸ்டிக் குண்டு பார் என்று கூறிடுவதுபோல ரஷ்யா, முழு மூச்சாக, அந்த முயற்சியிலே இறங்கிவிட்டதாம்.

என்ன கோரம்! என்ன போர் வெறி! இந்த அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் நிழலிலேயே வாழ எண்ணுகிறது இந்தியா—பிரதமர் நேருவும், அமெரிக்க அரவணைப்பிலே ஆனந்தங் காண்கிறார்.

கொரியாவிலே குண்டு வீச்சு—அதுவும் கோர அணுகுண்டு வீச்சு! ஆம், ஆசியாவிலே ஒரு பெரிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிடும். பிரதமர் நேரு. ஆசிய ஜோதி—அகில உலக ஒளிவிளக்கு! ஆசியாவிற்கு வரும் பேராபத்தை எப்படி தவிர்ப்பது? இந்தியாவோ, ஆசியாவின் ராணி! இருந்தும் அமெரிக்காவுடன் கைகோர்த்து நடனமாடுகிறது!

அமைதிபுரியாக, உலகு மாற வேண்டும் என்று கருதிடுவோர், இந்த அமெரிக்க ஏகாதிபத்திய போர் வெறியைக் கண்டித்தே தீருவர். ஆதிபத்தியதாகம் அளவிற்கு மீறிப்போய்விட்டது! அணுகுண்டை வீசியாவது, தங்கள் ஆணவப் போக்கிற்கு அசைவு வராமல் காத்துக் கொள்ளத் துடிக்கிறது.

அணுகுண்டு, ஒரு அபாய படைப்பு-அது வீசப்படக் கூடாது என்பது மட்டுமல்ல, உலகமே, அதனை வெறுக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கொஞ்சிக் குலவுகிற இந்தியாவும், இதற்கு துணை நிற்கக்கூடாது வெறும் சொற் சவுக்களால் மட்டும் காரியம் நடந்துவிடாது. கொரியாவில் குண்டு என்றால், அது ஆசியாவிற்கு வரும் ஆபத்து—பிரதமர் நேரு என்ன செய்யப் போகிறார்? வழக்கம் போல. 'நீளப்' பேச்சுகளால் நிலைமையை சரி செய்துவிட முடியுமா? முடியாது!!

'நல்ல முடிவு' கூடாதாம்

ராதா நாடகத்திற்கு தடை!

சர்க்காரின் 'பயம்' வளர்ந்து கொண்டே போகிறது! 'அஞ்சி அஞ்சி சாவார், இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று பாரதியார் பாடிய பாடலுக்கு, இன்றைய சென்னை மந்திரிசபை இலக்கியமாகத் திகழ்கிறது!

அவர்கள் தடை போடாதது எதுவுமில்லை — ஆனால் அவர்கள் பேசாத 'சுதந்திரங்களும்' எதுவுமில்லை!

பேசினால் தடை — எழுதினால் தடை—நூலாசிரியர், அச்சிட்டவர் எல்லோரையும் வழக்கில் சிக்க வைத்து 'வம்பு' செய்கிறார்கள் தண்டனை, அபராதம் என்று 'தாறுமாறாக' நடந்து கொள்கிறார்கள்—ஆனாலும், அவர்கள், ஜனநாயகம் பேசுகிறார்கள்!

சென்னையில் தோழர் நடிகவேள் எம். ஆர் இராதா, அவர்கள் 'நல்ல முடிவு' என்ற நாடகம் நடத்திவந்தார். அதனை ஆளவந்தார்கள் தடுத்துவிட்டார்கள். அந்த நாடகத்தை நடத்தக்கூடாது என்று உத்திரவிட்டுவிட்டார்கள்.

நாடாளும் 'நம்ம மந்திரிகளுக்கு' இது புதிதல்ல — இதற்கு முன் தடுத்த நாடகங்களின் பட்டியலே பெரிது — அத்துடன் இதனையும் இணைக்கிறார்கள்.

'நல்ல முடிவு' கூடாது என்று கூறிவிட்டார்கள்—இந்த 'பொல்லாத முடிவிற்கு' ஏன் வந்தார்கள் என்று நமக்குப் புரியவில்லை.

தோழர் ராதாவின் நாடகங்கள் பலவற்றை ஏற்கனவே தடுத்திருக்கிறார்கள். அதனால் அவர் கலங்கிவிடவில்லை.

அடுத்து அவர் நடத்தப் போகிற நாடகம் 'அறிவு இல்லாத மந்திரிகள்'—நாடகங்களைத் தடுப்பதால் நாடாளும் மந்திரிகள் நாட்டவரால் இப்பெயரால் அழைக்கப்பட்டாலும் ஆச்சர்யமில்லை யல்லவா?

மணமக்கள் வாழ்க!

'சாதியும் சங்கடமும் காதலுக்கில்லை' என்பதைத் தங்கள் திருமண மூலம் காட்டிய நமது சென்னை 'திராவிடநாடு' ஏஜண்டு — ஜி. என். சாமி ஜெயலட்சுமி தம்பதிகள் தடைக்கற்களைப் புன்சிரிப்பால் தள்ளிவிட்டு புதுவாழ்வுச்சோலையில் உலவப் புறப்பட்டுவிட்டனர் வாழ்க! வாழ்க!!

கழகச் செய்திகள்

நவ. 4

குழித்தலையில் திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு விரிவு படுத்தப்பட்டு மாற்றியமைக்கப்பட்டது. செயலாளர்கள்:- சே. ஆர். இராசா, தீ. வீ. முத்துகிருஷ்ண, விளம்பர உறுப்பினர்கள்:- மான், பாலு, பொருள் உறுப்பினர்:- மணி, முத்துச்சாமி, மற்றைய செயற்குழுவினர்:- ரா சுப்பிரமணியம், சந்திரா, ச. இராசலிங்கம், செல்லம் மா. அர்த்தநாரி, ஏ. வாசு.

கோளத்தூரில்:- தோழர் கே. பி. நரசிம்மன் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- கே. குருசாமி, துணைச் செயலாளர்கள்:- ஏ. ஜி. மாரியப்பா, பொருள் உறுப்பினர்:- கே. எ. அனந்தராசு, விளம்பர உறுப்பினர்:- கே. எஸ். காதர் பாட்சா.

திருச்சுழியில்:- தோழர் சி. பெரியசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில், புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர் :- சி. முத்தையா, துணைச்செயலாளர்:- பி. டி. ராஜன், பொருள் உறுப்பினர்:- ஆ. முருகேச பாண்டியன், விளம்பர உறுப்பினர்:- சி. பெரியசாமி, எம். முத்தானந்தம், மற்றைய உறுப்பினர்கள்:- மு. பாக்கியசாமி, இரா சேர்மன், மு. சி. சுப்பையா, பெ. சௌந்திரபாண்டியன்.

கொழும்பவில்:- தி. மு. க. சார்பில் வ. உ. சி. நினைவு நாள் பொதுக் கூட்டம் தோழர் டி. எம். பீர்முகம்மது தலைமையில் நடந்தது. தோழர்கள் சு. சண்முகம், எம். எஸ். குலசேகரன், பி. டி. லூக்காஸ், மா. இளஞ்சேரன், இளவழகன் பேசினர். கூட்டம் முடிவில் வ. உ. சி. படம், தூத்துக்குடி ஜெர்மான் சூசையா அவர்களால் பலருக்கு விநியோகிக்கப்பட்டது.

நவ. 5

தூத்துக்குடி தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- கே. எம். ராஜன், துணைச்செயலாளர்:- அய்யா, மசானமுத்து, பொருள் உறுப்பினர்:— வயணப் பெருமாள் விளம்பர உறுப்பினர்:- திரவியம், தணிக்கையாளர்:- வழித்துணை ராமன், மற்றும் இருபது செயற்குழுவினர்.

திருச்சுழியில் தோழர் சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, என். இராமசாமி பேசினர்.

வேலூரில் தோழர் முல்லை எம். பி. வடிவேல் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கருத்தோவியன், குப்புசாமி, இளஞ்செழியன், சி. பி. சிற்றரசு பேசினர்.

நவ. 16

கண்டவராயன்பட்டியில் தோழர் காசிநாதன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் ப. சி. பி. பிச்சை திராவிடப் பண் பாடினார். தோழர் இராம - வீரப்பா கொடியேற்றுவித்தார். தோழர்கள் சேதுராமன், ஏ. வீரபத்திரன் பேசினர்.

நவ. 17

ஆரணியில் தோழர் ஈ. வே. கி. சம்பத் தலைமையில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடந்தது. புது ஆண்டிற்குரிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— பொரு. பாலகிட்டிணன், துணைச் செயலாளர்:— அ. சன்னையன் பொருளாளர்:— ஆர். கோபால் விளம்பர உறுப்பினர்:- க. நாராயணன் மற்றைய உறுப்பினர்கள்:- அ. ப. [illegible], அ. சி. இராதாகிருட்டிணன், கோ. கேசன், [illegible]த்திராசன், [illegible]பெருமாள், அண்ணாமலை, டி. அரசு. மாவட்ட செயற்குழு உறுப்பினர்:— அ. கண்ணையன், தி. எத்திராசன்.

நவ. 19

வடசென்னையில் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடந்தது. புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- சி. எஸ். மணி, பி. கே. மாரி[illegible]ன், பொருளாளர்:- ஏ. எம். மருதப்பா, விளம்பர உறுப்பினர்:- தி. சு. மணி மற்றைய செயற்குழுவினர் சேர்மன் எஸ். தங்கவேல், சே. அரசு, சுப்பிரமணியம், தங்கையப்பா, பி. மணி, கே. எம். கண்ணபிரான்.

வளவனூரில் நடந்த தி மு. க. உறுப்பினர் கூட்டத்தில் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது செயலாளர்:- முத்துப்பெருமாள், துணைச் செயலாளர்:- நாமதேவன், பொருள் உறுப்பினர்:- இளஞ்சோழன், விளம்பர உறுப்பினர்:- ந. கண்ணன் மற்றைய செயற்குழுவினர்:- கண்ணன், சாமிக்கண்ணு, நடராசன், கணபதி, ராமானுசம், முத்து, அழகன், முனுசாமி.

சடையநல்லூரில் தி மு க. உறுப்பினர்கள் கூட்டம் செயலாளர் தோழர் இரா. பழனிச்சாமி தலைமையில் கூடியது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வாணியம்பாடியில் தோழர் எம். பி. சத்தியம் தலைமையில் தோழர்கள், தத்தப்பன், இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. பேசினர். அன்று காலையில் தோழர் ஆறுமுகம் கழகக் கொடியை ஏற்றுவித்தார்.

அலங்காநல்லூர் வட்டார தி. மு. க. செயற்குழு கூட்டம் தோழர் சுப்பிரமணியம் தலைமையில் நடந்தது. புதிய செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:— ராமச்சந்திரன் துணைச் செயலாளர்:- மாரிமுத்து, பொருள் உறுப்பினர்:- வீரநாதன், விளம்பர உறுப்பினர்கள்:— வேணுகோபால், தனிக்கோடி, அழகர்சாமி, கந்தசாமி. மற்றைய உறுப்பினர்கள்:- சின்னையா, சின்னகணபதி, செல்வமணி, ராசன், மலைச்சாமி.

நவ. 20

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாடியம் கிராமத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா தோழர் 'பொன்னி' பெரியண்ணன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர்கள் மு கருணாநிதி, என். எஸ். இளங்கோ கலந்துகொண்டார்கள். பல பாகங்களிலிருந்தும் கிராமமக்கள் திரளாக வந்து கூடினார்கள். நாடியம் கிராமம் போக்குவரத்து வசதியில்லாத அளவுக்கு ஒரு தீவு போல தொடர்பற்று இருந்தங்கூட அங்கு பரவியுள்ள இயக்க உணர்ச்சியும் இளைஞர் எழுச்சியும் மிகவும் பாராட்டத் தக்கது. உள்ளூர்த் தோழர்களான ராமய்யா, சிவசாமி, இன்னும் பல நண்பர்களின் ஒத்துழைப்பும், போராவூரணி குழந்தை — அறந்தாங்கி பொப்பிலி ஆகியோரின் முயற்சியும் கூட்டத்திற்கு பெருமதிப்பை அளித்தன. தோழர் போராவூரணி கருப்பையா பாட — தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர்கள் அடைக்கலம், இளங்கோ, மு. கருணாநிதி ஆகியோர் சமுதாய சீர்திருத்தம்—அரசியல் நிலைபற்றி பேசினார்கள்.

நவ. 21

தோழர்கள் நாடியமிருந்து புறப்பட்டு பின் புதுப்பட்டினத்துக்குப் படகில் சென்று தி. மு. கழகத் தோழர்கள் நடத்திய விருந்துக்குப் பின்—ராஜாமடத்தில் சிறிது நேரம் தங்கி மாணவத் தோழர்களுடன் இயக்க நிலை—வளர்ச்சிகள் குறித்துப் பேசிவிட்டு—அதிராம்பட்டினம் வந்து சேர்ந்தனர். அதிராம்பட்டினத்தில் மாலை 6-மணிக்கு கூட்டம் துவங்கிற்று. பல தோழர்கள் பாடினார்கள். போராவூரணி கருப்பையா திராவிட நாட்டுப் பண்ணுக்குப் பின் தோழர்கள் அடைக்கலம், இளங்கோ, மு. கருணாநிதி பேசினர்.

கூட்டத்திற்கு பட்டுக்கோட்டை ராசாமடம், போராவூரணி, அறந்தாங்கி, முத்துப்பேட்டை முதலிய பல இடங்களிலுமிருந்தும் தோழர்கள் வந்து கூடினர். தோழர் என். எஸ். இளங்கோ நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(ந. கி)

நவ. 22

திருத்தணியில் தி மு. க. துவக்கு விழா, தோழர் க. அ. அ. ரஷீத் தலைமையில் நடந்தது. காஞ்சிபுரம் தோழர்கள் சே. கோ. பெருமாள், வி. பி. சிவம், கே. டி. எஸ். மணி பேசினர். மேலும் மாணவத் தோழர்கள் இராமலிங்கம், நாகலிங்கம், தோழியர்கள் முத்தம்மாள், உண்ணாமலையம்மாள் பேசினர்.

நவ. 24

உச்சரிச்சான்பட்டியில், அழகிச்சிப்பட்டிக் கிளை சார்பில், மதுரை தோழர் முத்து தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் காஞ்சி. கல்யாணசுந்தரம், அய்யாச்சாமி பேசினர்.

சத்திரப்பட்டியில். தோழர் சமுசிகாபுரம் பி. பழனியப்பன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பொன்னுதுரை, ஈஸ்வரமூர்த்தி, ஜி. பி. ஏ. சாக்ரடீஸ் பேசினர்.

நவ. 25

குருராயப் பேட்டையில் தோழர் ஏ. எல். வி. சஞ்சீவி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் இராமலிங்கம், நாகலிங்கம், கிருட்டிணசாமி, சென்னை.கார்பரேஷன் உறுப்பினர் வி. முனுசாமி, மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), தோழியர்கள் முத்தம்மாள், உண்ணாமலையம்மாள் பேசினர்.

போடிநாயக்கனூரில் தோழர் மா. பெரியசாமி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் தங்கராசன் நாட்டுப் பண் பாடினார். தோழர்கள் சுப்ரமணியம், எம். எஸ். இராமசாமி மதுரை அப்பாச்சாமி பேசினர்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

திராவிடர் டைரி--1951

திராவிடர் அனைவரும் பெற்றிருக்க வேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு

ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு

இளைஞர் உலகத்தின் இதய கீதமாக விளங்கும்

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய

எழில்மிகு ஏடு

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்!

சென்ற ஆண்டுபோல கிடைக்க வில்லையே என்று வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* உலக அறிஞர்களின் கருத்துக் குவியல்கள், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் சிந்தனைக் கருவூலங்கள்.
* தி. மு. கழக முழு விவரங்கள்—ஓராண்டு வளர்ச்சி, அமைப்பு முறை, பேச்சாளர் பட்டியல், கிளைகள், இன்னும் பல.
* தி. மு. மாணவர் கழக முக்கிய குறிப்புகள்.
* மற்றும், திராவிடர் திருநாட்கள், அரசினர் விடுமுறை நாட்கள், தபால், தந்தி கட்டண விகிதங்கள், விற்பனை வரி, வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு கட்டணங்கள், ட்ரங்க் டெலிபோன் கட்டணங்கள். இன்னும் இன்றியமையாத குறிப்புகள் ஏராளம்.

அழகான அமைப்பு 530-பக்கங்கள் விலை அணா 14.

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ. 1—0—0-ம்,
பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—4—0-ம் அனுப்பவேண்டும்.
விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.
முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது.

போர்வாள் அலுவலகம் பவழக்காரத் தெரு சென்னை 1. (Ad)

செங்கற்பட்டு மாவட்ட

திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

காஞ்சியில்

மு. அரங்கசாமி பந்தலில்

டிசம்பர் 23-24 தேதிகளில்

தலைவர்
சி. பி. சிற்றரசு
துவக்குபவர்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
பொதுச்செயலாளர்
சி. என். அண்ணுதுரை எம். ஏ.
கலந்துகொள்வார்.

நாடகங்கள்
சி. என். அண்ணுதுரை
நடிப்புப்புலவர்
கே. ஆர். இராமசாமி
பங்குகொள்ளும்
சந்திரமோகன்
நீதிதேவன் மயக்கம்

★ ★

சொற்பொழிவு
நெடுஞ்செழியன், எம். ஏ., ஈ. வே. கி. சம்பத்,
மு. கருணுநிதி, கே. ஏ. மதியழகன், பி. ஏ.,
ஏ. சித்தையன், என். வி. நடராசன்,
என். எஸ். இளங்கோ, காஞ்சி. கல்யாணசுந்தரம்
மற்றும் பலர்.

இசை நிகழ்ச்சி
திருச்சி எம். எம். மாரியப்பா
திருவாரூர் டி. வி. நமசிவாயம்
நாகூர் எம். அனிபா
சென்னை கே. ஆர். செல்லமுத்து
காஞ்சி. புண்ணியகோட்டி

நடைபெறும்

சே. கோ. பெருமாள், டி. சபாபதி,
செயலாளர்கள்.

சி. வி. எம். அண்ணுமலை,
வரவேற்புக்குழுத் தலைவர்.

சி. பஞ்சாட்சரம், கே. டி. எஸ். மணி,
தொண்டர் படைத் தலைவர்கள்.

ஆர். கே. மூர்த்தி, இ. எத்திராசு,
விளம்பர உறுப்பினர்கள்.

மாநாட்டுக் கட்டணம் இரு நாட்களுக்கும்

ஆதரவாளர்	ரூ. 10		
வரவேற்பாளர்	ரூ. 5,	பார்வையாளர்	ரூ. 1,
பிரதிநிதி	ரூ. 2,	பெண்களுக்கு	அ. 8.

நாடகத்திற்குக் கட்டணம் கிடையாது.

குன்றத்தூர் வழக்கு நிதி

'வேதனைக்குரல்' வெற்றி

ரூ. 1000 அன்பளிப்பு

மாவட்டக் கழகத்துக்கு ரூ. 500.

வாலாஜாபாத் ராஜா தியேட்டரில் தோழர் மு. கருணாநிதி தீட்டிய "வேதனைக் குரல்" என்ற புதுமை நாடகம் வெற்றிகரமாக 9—12—50 இரவு நடைபெற்றது. மேற்படி நாடகத்தை காஞ்சி புதுமலர்ச்சி நாடக சபையினர் நடத்தினர். வேதனைக் குரல் நாடகத்தின் பிரதமராகத் தோழர் மு. கருணாநிதியே ஏற்று நடித்தார். அவருடன் புலவர் குழந்தையா, கவிஞர் கண்ணதாசன், சுழுத்து அடிகள் பி. ஏ., தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்) அரங்கண்ணல், செங்கற்பட்டு மாவட்ட தி-மு-க- செயலாளர் சி-வி-எம்- அண்ணாமலை, காஞ்சி கவுன்சிலர் சி-வி- இராசகோபால், ஜூபிடர் ஐஸ் கம்பெனி உரிமையாளர் கே-டி-எஸ்- மணி, காஞ்சி தி-மு-க- செயலாளர் சே-கோ-பெருமாள், காஞ்சி திராவிட முன்னேற்றக் கழக வெற்றிச் சீயங்களான வெ-சம்பந்தன், டி-சபாபதி, எதிராஜ், முருகேசன், மாணிக்கம், கச்சபாலையப், சானகிராமன், புண்ணியகோட்டி ஆகியோரும், நடிகர் உலகத்துப்புகழேணியில் ஏறிநிம் நடிகமணியான எம்-என்- கிருஷ்ணன், மகாலிங்கம், முத்துக்கூத்தன் பி-எப்- மணி முதலியோரும் "வேதனைக்குரலில்" பங்கேற்று வெற்றிகரமாக்கினர்.

நாடக வெற்றிக்கு 'மேக்-அப்' செய்த தோழர்கள் காஞ்சி சுந்தரேசன், சென்னை கஜபதி, சீன் ஆறுமுகம், கன்னியப்பன், உடை அலங்காரம் செய்து தந்த இராசையா, ஒளிமூலம் அலங்கரித்த பத்மநாபன், பின்னணி இசைக் குழுவினர் சண்முகானந்தா, ஆபிலா ஆகியோரின் பெரும்பணியும் காரணமாகும்.

நாடகத்துக்கு செங்கற்பட்டு, சென்னை, வேலூர், ஆற்காடு, விருத்தாசலம், முதலிய பல இடங்களிலிருந்தும் கழக முன்னணி வீரர்கள் வந்து கூடியிருந்தனர்

நாடகம் முடிந்ததும் புதுமலர்ச்சி நாடக சபையின் அமைப்பாளர் இராம அரங்கண்ணல், வந்திருந்தோருக்குத் தனது மகிழ்ச்சி கலந்த நன்றியைத் தெரிவித்துப் பேசுகையில், இன்று எனது நண்பர்கள் எழுப்பிய வேதனைக் குரல்', குன்றத்தூரில் அண்மையில் ஆளவந்தாரால் மக்களிடையே கிளப்பிய வேதனைக் குரலை யொட்டி எழுப்பியதாகும். எட்டுமுறை துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கியதாக போக்கென்று நமது கழக முன்னணி வீரர்கள் பலர்மீது வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். அவர்கள் மீது தடையுத்திரவை மீறினர்-என்ற உண்மையான குற்றத்தைச் சாட்டாமல், கல்வரம் செய்தனர் என்ற வீண் பழியைச் சுமத்தியுள்ளனர். வீண் பழிக்கு நாம் ஆளாகமுடியாது. வீண்வேலையில் நாட்டமில்லாத நம் மீது வீண் பழி! எனவே, அதை யெதிர்த்து வழக்குமன்றத்தில் போராடுவதென செங்கற்பட்டு மாவட்ட கழகத்தார் முடிவு செய்தனர் அதையொட்டி நான், இந்நாடக அமைப்பின் பொறுப்பாளன் ஆனேன். நமது பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் குன்றத்தூர் வழக்கு நிதிக்காக ரூ. 500 நீங்கள் தந்தால் போதும் என்று, இது சம்பந்தமாக நாங்கள் அவரின் ஆலோசனையைக் கேட்டபொழுது கூறினார்கள். ஆனால் அவர்கள் விரும்பும் செயலைப் பன்மடங்கு வெற்றிகரமாகக் ஆக்கிக் காட்டுவோம். அவர்கள் கட்டளையை பன்மடங்கு சிறப்பாக முடித்துத் தருவோம்-என்ற உறுதிமொழியை அண்ணா அவர்கட்குத் தெரிவித்துக் கொள்ளுமுகத்தான் ரூ. 1000 ஆக. குன்றத்

(4-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram